சிவமயம்

நவாலியில் குருபரகை எழுந்தருளிய

"குருமுருகன்" அவர்களின்

புண்ணிய கதைப் பாடல்

அன்னரின் திவ்ய வரலாறுபற்றிய

முதலாவது வெளியீடு

(1929 முதல் 1982 வரை)

அசுய ஆண்டு ஐப்பசித் திங்கள் ஏழாம் நாள்

உ

சிவமயம்

"குருமுருகன் புகழ்"

(பாடல்)

இது

நவாலியூர் ஸ்ரீ கதிர்காம முருகன் சந்நிதானம்

அருள்மிகு

குருமுருகன் அவர்களின் பிரதம சிஷ்யராம்

சிவமுனி அவர்களால்

குருவருளோடு பாடப்பெற்றது.

முகவுரை

அனாதி நித்த சித்துருவாகிய பரம்பொருள் உலகில் பல்லுயிரும் உய்வெய்தும் வண்ணம் தாமே குருவடிவாகத் திரு அவதாரஞ் செய்து புண்ணிய பூமியாம் நவாலியில், தனது உறைபதி, புண்ணிய தீர்த்தம் முதலியன உண்டுபண்ணி, அளவில்லாத அற்புதங்கள் கடந்த 26 வருட காலவரை நிகழ்த்தி, ஆன்மாக்களைப் பேரின்பப் பெருவாழ்வில் திளைக்கச் செய்த, அருள்மிகு ''குருமுருகன்'' அவர்களின் புண்ணிய கதையைச் சித்தரிக்கும் அரியவருட் பாடலே, ''குருமுருகன் புகழ்'' என்ற பெயருடன் அன்னவரின் பிரதம சிஷ்யராம் சிவமுனி அவர் களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இப்பாடல் ஏனைய வருட்பாடல்களைப் போல் பொருள் கொள் வது சுடினமன்று. கற்றவர், மற்றவர், சகலரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், இனிய நடைமுறையில், அதிக நீளமில்லாமல், சுருக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் படிப்பவர் மெய்யன்புடையராய் உளமுருகப் பாடுந் தன்மை யராயின், முருகதாசர்களாய் விளங்குவர் என்பதில் ஐயமில்லை.

ஓ

முருகன் துணை

காப்பு

அம்மையுமாய் அப்பனுமாய் அவனியிலுள்ளத்தனைக்கும்
அற்புதக் கோலமுடன் அவதரித்த வுத்தமனே
நவாலியம் பதியமர்ந்த குருமுருகன் புகழ்பாட
ஆனைமுகன் கணபதியே காப்பு.

வெண்பா

சீர்கொண்ட பூவுலகிற் சிறப்பாயுதித்த குரு"முருகனே"
யான் செந்தமிழாற் பாடவே யின்னருள்தான் தந்திடு
நற் குஞ்சரத்தா னப்பனுக்கு மூத்த
பிள்ளை யானவனே காப்பு.

விருத்தம்

ஆனைமுகமும் ஒரு கொம்புடனேர் குறைக்கொம்பும்
பானைபோற் பெருவயிறும் பாங்கான நூலழகும்
தானேயனுதியனுய்த் தனக்குநிகர் யாருமிலா வுத்தமனே
உனைப்பணிவேன் நாவுறைவாய் ஐங்கரனே.

குருமுருகன் புகழ்

சீர்மிக்க வூராம், சிறந்த நவாலிபிலே,
அவதாரம் செய்தகுரு "முருகன்" தன்கதையை
உலகோரறிய, உவந்துமே நான் பாட
வேளமுகங் கொண்ட விநாயகனே முன்நடவாய்
சரஸ்வதி தேவி என்நாவில் குடியிருப்பாய்
குற்றம்குறை வாராமல் குழந்தைவேல் பார்த்தி
[டுவாய்

புண்ணியங்கள் பூத்த பூமியாம் நவாலியிலே
குஞ்சர் வளவென்று குறிக்கப்படு மோரிடத்தே
இலந்தைமர நிழலில் இங்கித மாகவேதான்
தெய்வானை யென்ற சீமாட்டி தன்வயிற்றில்
இருந்து உதித்தவராம் முகமூடி யொன்றுடனே
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டிருபத் தொன்
[பதிலே

மார்கழி மாதம் மதிநிறைந்த நன்னாளில்
பாவங்கள் மிகுந்த பாரினைத் தான் பாராமல்,
முகமூடி யொன்றுடனே யுதித்தாரே யுத்தமனர்
ஆராய்ச்சி குன்றிய அக்காலத் தோர்களுக்கு
முகமூடி புரியாத புதிரா யிருந்தமையால்
இறந்த குழந்தையென வெண்ணிஞ ரெல்லோரும்
கூட்டிச் சுருட்டிக் கவனமே யில்லாமல்
பிணமென்று வெண்ணிப் போட்டாரே பின்புறத்
[தில்

அடக்கம் செய்யவேணுமென்று ஆட்களும் கூடி
[னரே

அடக்கஞ் செய்வதற்கு ஆயத்தஞ் செய்தபின்னர்
விஷயந் தெரிந்தொருவர் விரைந்துமே பார்த்
[தாராம்

முகமூடி யிதுவெனவே யகற்றினரா மப்போது
குழந்தையின் தோற்றம் அழகா யிருந்ததுடன்
அழுதகுர லொலியும் அதிசயிக்கச் செய்ததுவாம்
ஏங்கி அழுதோரை இன்புறவே செய்தார்காண்
பெற்ற தாயுள்ளம் பூரிப்படைந் ததுகாண்
பொதுப்பணி செய்யப் புதுமையாய் வந்தமை
[யால்
பெற்றவள் தம்முடலில் பாலென்ப தில்லாமல்
பொதுவான தாய்மாரின் பாலூட்டி வளர்த்தனரே
அழகுக்கு அழகூட்டும் அரசமணி யெனவே
இராசமணி யென்றே யழைத்தார் களம்மகவை
அருமை பெருமையுடன் வளர்ந்ததுவே யம்மக
[வும்
மங்கைப் பருவமெய்தி மாதாவின் சொற்படியே
புண்ணியவா னொருவனைப் புருடனுக்குக் கைப்பிடித்
புத்திரர்கள் நால்வர் பிறந்தா ரவர்களுக்கு [து
பாசமாம் பற்றென்ப தில்லாத காரணத்தால்
தன்னை முழுது மிறைவனுக்கே யர்ப்பணித்து
புருடன் பிள்ளைகளையும் அவனிடமே விட்டார்
[காண்
துறவிகளாகத் துறவறத்தில் நாட்டமுற்று
தனித்திருந்து தவமியற்றத் தானுசை கொண்டா
[ரே
இல்லறத்தி லிருந்து இழைத்த உடலெனவோ
நெருப்புக் காய்ச்சல் சுரம்எரித்த திருமுறையாய்
உடல் பூந்துருத்தியாகப் புனித மடைந்தபின்பு
கந்தன் கருணைகிட்டிக் கதிர்காமம் செல்வதற்கு
உத்தரவும் கிட்டிய தது, ஒழுங்குக ளெம் உண்டாச்சு
அன்னரின் கோலங்கண் டதிசயித்தா ரூருலகார்

ஏசுவார், பேசுவார், தடுப்பார், தோற்றிடுவார்
பாதயாத்திரை செல்லப் பாவை துணிந்தனையோ
பார்க்கவே யெம்முள்ளம் பதைக்குதே யென்றழு
[வார்
புருடனு மொருபுறமாய்ப் பேசிடுவா னந்நேரம்
ஆசை மனையாளே! அன்புடைய என்மாதே!
அன்பை மறந்தனையோ ஆசைக்கணை யிட்டனை
[யோ
காதலன் தவித்துநிற்கக் கதிர்காமஞ் செல்வது
[வோ
புண்ணியமு முண்டோ புருடனைக் கைவிட்டவர்க்கு
என்று பலவாரு யவதூறு சொன்னுன்காண்
தன்னையே மறந்திட்ட தலைவிதா னேதுசொல்வாள்
குழந்தை வடிவேலன் கையில் பிடித்துக்கொண்டு
கதிர்காமஞ் செல்லும்பாதை யிதுவென்று சொல்லி
தூட்டிச் செல்வதுபோல் இருந்ததா மன்னேரம்
ஆர்தா னறிவார் அருளாளி தம்மியல்பை
பாவியர்க ளிருளால் பரிதவித்தா ரந்நேரம்
அம்பாறைக் கலவரத்தை அவருக் குணர்த்தினர்
[காண்
குண்டர்கள் செய்துவரும் கொலைகொடுமைக
[ளெல்லாம்
எடுத்துரைத்த பின்னும் ஏமாற்றம் தானடைந்
[தார்
அருளாளியி னுள்ளம் அணுவளவும் தளரவில்லை
வைரிய மெனவே வலுத்ததுள்ளம் மேன்மேலும்
தளராமை கண்டு தவித்தனரே புற்றவர்கள்
நெருப்புக் காய்ச்சல்வந்து நெடுநாட்களாகவில்லை
நற்கணக்குப்போட்டாலும் நாற்பதுநாளாகவில்

புத்திதான் கெட்டதுவோ புருடனுனக் கில்லையோ
என்ன மதியுனக்கு எங்களுரை கேளாமல்
கெடுபிடியாய் நிற்கின்றும் கேடுதான் சூழ்ந்தது
[வோ

என்று புலம்பியே யழுதார்க ளெல்லோரும்
சத்திய சோதனையைச் சகித்தாரே யுள்ளமதில்
உத்தமரர் உள்ளுறுதி உற்றுரெல்லா மறிந்தார்
வந்தார்கள் வழிக்கு வளமுட னவரையணுகி
எவ்வாறு போவீர்? என்றிதமாகக் கேட்டனரே
எங்களுதவி யேதும் ஏந்திழையே வேண்டாமோ
துணைக்கு வரலாமோ, தூயவளே யுந்தனுக்கு
என்றவுரை கேட்டு எடுத்துரைத்தா ருத்தமனர்
நான்பாத யாத்திரையாக்ப் பக்தியுடன் சென்றி
[டுவேன்

உங்களுதவி யெதும் இனிவேண்டா மெந்தனுக்கு
வாக்களித்த துண்டு வடிவேலன் எந்தனுக்கு
ஒன்றற்கும் அஞ்சாதே ஒருதுணையும் வேண்டா
[தே

துணையாக நான்வருவேன் துணிந்து நிற்பாயெ
[னவே

காட்சியும் கண்டேன் கடற்கரை யோரமதாய்
கையில் வேல் ஒன்றுடனே கதிர்வேலன்
[கைப்பிடித்து

கூட்டிச் செல்வதையும் கூடநான் சென்றதையும்
என்றவுரை கேட்டு உற்றுர் என்போர் களெல்லாம்
வாய்மேல் விரல்வைத்து வார்த்தை யொன்றுங்
[கூறுமல்

செய்வதறியாமல் திகைத்துப்போய் நின்றுர் காண்
சென்றுரே யுத்தமரூர் செல்வச் சந்நிதி முதலில்

அங்கிருந்து கால்நடையாய்ச் சென்றுர் கதிர்காமம்
செல்லும் வழிதன்னில் வந்தார் வற்றுப் பழைக்கு
நாநூற்றுக்கும் அதிக நற்சங்கத் தோருடனே
பாடிப்பணிந்து பரவசமடைந்தார் காண்.
அன்பர்கள் கோஷமிடும் அரோகரா வொலியை
அன்புடனே கேட்டு அகமகிழ்ந்திடுவார்காண்
வற்றுப்பழையம்மன் கோவிலிலன்பரெல்லாம்
பொங்கல்கள் செய்வதையும் பூசைகள்
[செய்வதையும்
கண்டு களிப்படைந்தார் காதலும் மேலிடவே
அவ்விடத்தை விட்டு அகன்று செல்லும் வழியில்
எதிர்கொண்ட எத்தனையோ ஸ்தலங்களை வணங்கி
திருகோணமலை தன்னைச் சேர்ந்தாரே யுத்தமனர்
அவ்விடத்தில் கோவில் கொண்ட கோணேஸ்
[வரரை வணங்கி
தலத்தின் மகிமையினைத் தங்கியிருந்தறிந்தார்
[காண்
பாடல் பல பெற்றதலம் பிரசித்தி பெற்றதலம்
ஆதிசைவர்கள் வாழும் அப்புண்ணிய பூமி
[தன்னில்
தானங்கள் தர்மங்கள் தயவுடனே செய்வார் காண்
அங்கிருந்து மட்டுநகர் செல்லும் வழிதனிலே
காடுகள், மேடுகள், ஆறு, குளம், குட்டை
[யெல்லாம்
கடக்க நேரிட்டால் கடந்துமே போவார்காண்
கடற்கரையோரம் கடும் வெய்யில் மணல்மேலும்
நடந்து களைப்புற்றுர் நண்பகல் வேளைதனில்
தண்ணீர்த் தாகம் தணித்திடவோ ரிடமனறு
தவித்தார்களெல்லோரும் தாகமது மேலிடவே

வந்து அடைந்தார்கள் தண்ணீர்த் தடாகமொன்
தண்ணீர் பருகத் தடாகத் திறங்கையிலே [றை
முதலைகளைக் கண்டு முறையிட்டா ரெல்லோரும்
தண்ணீ ரெடுப்பதற்குத் தயங்கினு ரெல்லோரும்
அப்போது குருநாத ரிறங்கினுரக் குளத்தில்
தயங்காமலே துணிந்து தண்ணீரள்ளிக்
[கொடுத்தார்
மட்டுநகர் வாசிகள் மாண்புமிக்க மானிடர்கள்
மதிய போசனத்திற் கன்னமிட்டு உண்பார்காண்
அவர்கள் கொடுக்கும் அரிசி கறிவகைகளையே
காட்டில் சமைத்துக் கனவிலைகளிற் படைப்பார்
குடிமனைகள் மெத்தக் குறைவான காட்டிடையே
மரங்களின் கீழே மகிழ்ந்து விளைப்பாறிடுவார்
பின்னும் தொடர்ந்தார்கள் விட்டகுறை
[யாத்திரையை
வந்துமே சேர்ந்தார்கள் அடர்ந்தானைக்
[காடொன்றில்
ஆனைக்கூட்டமொன்று அவ்வழியில் நின்றதனுல்
அஞ்சினுரெல்லோரும் அகன்றது வார்வீக
[மெல்லாம்
சோரவிட்டார் மனதைச் சோதனை யதிகமென்றே
எங்கள் குருநாதர் தங்கவேலர் முன்வந்தார்
குழுமியே நின்ற கூட்டத்தைத் தான் நோக்கி
அரோகரா என்று சொல்வீர் ஆர்ப்பரித்து
[நின்றிடுவீர்
அச்சம் அகற்றிடுவீர் அரோகரா என்று சொல்வீர்
என்று பணித்திடவே யெல்லோரும் கோஷமிட்டார்
அரோகரா கோஷம் அகற்றிய தும் யானைகளை
ஒன்றுமே மீதமின்றி ஓதுங்கியே போயினவே

எமன் வாயில் நின்றும் மீண்டது போலெல்
[லோரும்
பெருமூச் செறிந்து போற்றினரே எம் குருவை
தங்கவேலர்தம் தகுந்த முயற்சியினுல்
தப்பினேமுயிரெனவே தாழ்பணிந்தாரெல்
[லோரும்
இனியெமக் கென்ன குறையென்று மகிழ்ந்திருந்
[தார்
இவ்வாறு யாத்திரையில் பல காதம் சென்ற
[பின்னர்
அப்பனே! என்று சொல்லி அண்ணுந்து பார்க்கை
[யிலே
காட்சிக் கினியவொரு கதிரமலை யுச்சிதன்னைக்
கண்டு களித்தார்கள் காணவந்தோர்க ளெல்லாம்
திக்குத்திசை தெரியாத காடுபல கடந்து
[வந்தோம்
கண்டுவிட்டோ மினியெமக்குத் திசை மாரு
[தெனவே
திசைமாருமை யென்ற இடத்திற்கு வந்தனரே
யாத்திரீகர் குழுக்கள் மூன்றுய்ப் பிரிந்தார்கள்
தொடர்ந்து நடந்தார்கள் வெட்ட வெளிதனிலே
வந்து அடைந்தார்கள் மலையடி வாரந்தன்னை
யாத்திரீகர்களெல்லாம் வந்துகுவிந்தனரே
பாடிப்பணிந்த வண்ணம் பக்தியுடன் செல்வார்
[காண்
பாடல் ஒலித்திடுமே பஸ் வண்டிகளிலெல்லாம்
கந்தவேளுறையும் கதிர்காமப் பதியதனைக்
காணவேண்டுமென்ற கனத்த நாளாசைதன்னை
நிறைவேற்றுங் காலம் நெருங்கியது வப்போது

கண்டு மகிழ்ந்திட்டார் கண்கொள்ளாக் காட்சி
[தனை

சாதிமத பேதஞ் சற்றுமே யில்லாமல்
ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமமெனவே
சிங்கள மக்களும் சேர்ந்தே யிருந்தார் காண்
தங்கவேலர் அங்கே மற்றவர் போலல்லாமல்
ஓரிடத்தில் தங்காமல் எங்குந் திரிந்திடுவார்
சுயபோத மில்லாத சுத்தாத்து மாவெனவே
சுயப்பிரக்ஞையில்லாமல் சென்றதிசூர் யாத்திரை
[யால்

கையிற் பொருளொன்றும் கொண்டுசெல்லவில்லை
[யவர்

ஏறுவார் மலைதன்னில், பின்னிறங்குவாரங்கிருந்து
வந்திடுவார் பின்பு வள்ளியம்மன் கோவிலுக்கு
தோற்ற மளித்திடுவார் தெய்வானை வாசலிலே
திறமுடனே யிருப்பார் திருமுருகன் வாசலிலே
மாணிக்க கங்கை சென்று ஸ்நானஞ் செய்திடு
[வார்

செல்வாரதன் பின்னே செல்லக் கதிர்காமம்
இராப்பொழுது கழிப்பார் இருக்கும் மடங்களிலே
இராமகிருஷ்ணர் மடத்தில் சாப்பிடலாமக்காலம்
இப்படியே சில நாட்கள் இருந்து வரும் நாளில்
ஒருநாள் உடைகள் தமை ஒரு புறத்தில் வைத்து
[விட்டு

கோவிலுக்குச் சென்று திரும்பி வந்து பார்க்கை
[யிலே

உடைகளைக் காணவில்லை உள்ளவர்களைக்
[கேட்டார்

நாமேனெடுக்கின்றோம் நாங்கள் கள்வரல்ல

உந்தன் பொருள்‖ மேலும் இச்சைதான் கொள்
[வோமோ
ஆசையவா அற்றவர் நாம் அவதானமாயிரென
அச்சுறுத்தல் செய்து எச்சரித்தாரெல்லோரும்
கொடியவுரை கேட்டபின்பு கோவிலுக்குச்
[சென்ருரே
முருகனிடம் சென்று முறையிட்டு நின்ருரே
அஞ்ச வேண்டாமெனவே யாறுதல் சொன்னுரோ
வந்துமே சேர்ந்தார் மறுபடியு மவ்விடத்தில்
அப்போது ஆங்கே அவரை முன்வைதவர்கள்
அறியாமல் செய்த பிழை அம்மாநீ பொறுத்திடு
[வாய்
தெரியாமல் செய்த பிழை தேவிநீ பொறுத்திடு
[வாய்
என்ற விதமாக இதமான வார்த்தை சொல்லி
திருப்பிக்கொடுத்தார்கள் திருடிவைத்த வுடை
[களையும்
நன்குவுபசரித்தார் நன்மக்களைப் போன்றே
இவ்விதமாயங்கே யிருந்து வருமோர் நாளில்
இராமகிருஷ்ணர் மடத்தில் கணக்கெழுது
[மோரிளைஞர்
நவாலியூர் வாசியாயிருந்தவோர் காரணத்தால்
தங்கவேலரை யணுகித் தக்க விசாரணைகள்
[செய்து
அறிந்தாரவர் நிலையும் அவசியத் தேவைகளையும்
அதன் பின்னரவர்மீது அன்புடையராயிருந்து
அன்னபானுதியெல்லாம் அன்புடனே யளித்திடு
[வார்

வீட்டிலுள் ளோருக்கு மறிவிச்ச ரணுமென்று
விலாசமது கேட்டு விட்டாரறிக்கை யொன்று
இவ்வாறிருக்கத் தங்கவேலர் தம்மனையார்
தலைவிபைக் காணமல் தவித்திருந்தா ரெல்லோ
[ரும்
கதிர்காமஞ் சென்றவர்கள் கனபேர் திரும்பிவிட்
[டார்
கலவரத்தைக் கண்டு கலங்கியே ஓடிவந்தோர்
கணவனுரைக் கண்டு கலக்கமுடன் சொன்னர்கா
உங்கள் தலைவியார் உறுதியுடனே யிருந்தார் [ண
நாங்கள் கலவரத்தைக் கண்டு திரும்பிவிட்டோம்
கதிர்காமஞ் செல்வேன் அல்லாதுயிர் மாய்ப்பேன்
என்றவிதமா யிருக்கின்ரு ரென்ன செய்வோம்
திரும்புவ தில்லையென்று திருத்தமாய் கூறிவிட்
[டார்
அதன் பின்னரவர் செய்தியே தும றிந்திலமே
குண்டர்கள் செய்துவரும் கொடிய கலவரத்தில்
நின்றுமுயிர் தவறி நிற்பாரோ வின்னமுந்தான்
விடுவோமவர் கதையை விட்டுமனந் திடப்படு
[வோம்
என்ற வகையா யிருக்கும் தறுவாயில்
வந்ததுவே தந்தியொன்று வாசித் தறிந்தனரே
என்ன வதிசயமோ எங்கள் புண்ணியபலனே
என்று வியந்தார்கள் எழுந்ததுவே யுற்சாகம்
குதூகலித்தார் கணவர், கூத்தாடினர் மக்கள்
உற்றார் உறவினர்கள் உவகைகொண்டார் மனதில்
கையுடனே காசும் கட்டிடவே பட்டுத்துணியும்
பார்சல் ஒன்றுபண்ணிப் பக்குவமா யனுப்பிவைத்
[தார்

கண்டவுடன் வரவும் காத்திருப்போ மென்று
[சொல்லித்
துண்டு மொன்று வைத்து அனுப்பியிருந்தாரவர்
[கள்
தங்கவே லரசுமங்கே தனித்திருப்பதில் மகிழ்ந்து
வீடு திரும்பிடவே விருப்ப மில்லாதவராய்
வேலவனிடம் போய் விண்ணப்பஞ் செய்துநின்
[ருர்
அவரின் மனக்குறிப்பை அறிந்தவேல் பெருமா
[னும்
கனவிலே தோன்றிக் காட்சி கொடுத்தாரவர்க்கு
உன்னுடன் நான்வருவேன் உண்மையென நம்பு
[என்று
இனியிங் கிருக்காமல் இன்பமுடன் போயிரென்றே
வாக்கும் கொடுத்து மறைந்தாரே வேலவனர்
தங்கவேலர் பின்னும் தயங்கியே நின்றிடவே
தவவேடம் பூண்டொருவர் தனிமையா னேரிடத்
[தில்
அடையாளச் சின்னமொன்றை உன்னிடங்
[கொடுத்திடவே
உத்தரவு கிடைத்திருக்கு ஏற்றுக் கொள்வாயெ
[ன்வே
இருகரங்களும் நீட்டி ஏற்று ருவகையுடன்
மட்டில்லா மகிழ்ச்சி மனதினில் பொங்கிடவே
என் செயலாமிதனை யென்றுமே கேட்டிடவே
அதி ரகஸ்யமான சின்னம், அலட்சியப் செய்யா
[மல்
அவதானமாக வைத்துப் பூசைசெய்ய வேணு
[மென்ருர்

அதுகேட்ட தங்கவேலர் அதிக பயபக்தியுடன்
சுவாமி நானிருக்குமிடம் நல்லாசார மில்லே
பூசை செய்வதற்கு நான் பொருத்தமானவனுமில்லே
கணவனுண்டு மக்களுண்டு களங்கப் படுத்திடு
[வார்
என்று பயந்து மிகவேங்கி நின்றுரப்போது
அவர் சொன்ன மொழிகேட்ட வரியதபோதனரும்
அன்பினுல் கலந்தவள்நீ யஞ்சாது கொண்டு
[செல்வாய்
உன்னுடனே கூடியிருந்தியக்கிடு வேனுந்தீன
[யான்
ஒன்றற்கு மஞ்சாமல் உற்சாகம் செய்திடுவாய்
நீசும்மாவிருக்கத் தானுக நடக்கு மெல்லாம்
என்ற குருமொழியை ஏற்றுரே யுள்ளமதில்
தங்குமிடம் வந்தவுடன் தந்திப் பார்சலொன்று
[வந்ததுவே
கிடைத்தது கையிற் பணமும் கட்டவோர் பட்டுத்
[துணியும்
சண்டு பகிழ்ந்தார் கரங்கூப்பியே தொழுதார்
புறப்பட்டார் ஊருக்குப் புதிய வுற்சாகமுடன்
அடுத்த நாட் காலே எட்டு மணியளவில்
வந்து இறங்கினர் நவாலி பஸ் வண்டியிலே
கதிர்காமம் சென்று வந்துவிட்டா ரென்றதுமே
அன்னதானஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள்
தங்கவேலர் தடுத்தும் அங்குள்ளவர்கள்
[சேட்கவில்லே
அன்னதானஞ் செய்தே யடக்கினர் பேராவலையும்
தங்கவேலர் கொண்டுவந்த தக்கவோர்
[சின்னமதை

பூசித்திடவைக்கப் பொருத்தமானேரிடத்தைப்
பார்த்து அறிந்திடவே பேராவல் கொண்டார்
[காண்
மோட்டார் இரதம் விடும் ஓட்டைக் குடிசை
யையே
பொருத்தமெனக் கண்டார் பூரித்தாருள்ளமதில்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டைடம்பத்தாறி
[னிலே
ஆடிமாத மதில் வைத்திடவே பூசனைக்கு
நல்லதோர் நாட்பார்த்து நல்லமுகூர்த்தமதில்
வைத்துமே பூசித்தார் வையகமும் வாழ்ந்திடவே
கோவிலுண்டான விதம் கேட்டவூரார்க
[ளெல்லாம்
வேடிக்கை பார்ப்பதற்கு விரைந்தார்க
[ளவ்விடத்தே
கூடிக்கதைத் திடுவார் குறை குறையாகவேதான்
இடவசதியில்லையே இவ்விடத்தில் கோவிலுக்கு
நாங்களும் தானே கதிர்காமம் சென்றவர்கள்
எங்களுடன் கந்தன் ஏனே வரவில்லை
நாங்களென்ன பாவிகளோ எமக்கு மிடமில்லையோ
தங்க வேலரென்ன தங்கத்தாலான வரோ
எங்களுடல் போலே யிரத்தமுஞ் சதையுமல்லோ
இதுவென்ன வுண்மையோ ஏமாற்றும் வித்தை
[யதோ
கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியும்
இருந்து பார்ப்போமே இனிமேல் நடப்பதையும்
என்று கிசுமுசென வெல்லோரும் கதைத்திடுவார்
எல்லா மறிந்தவரும் அறியாதார் போலிருந்தார்
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்

வளர்ந்து வந்ததே கோவில் வைதாரும்
[வாழ்த்திடவே
அற்புதங்கள் நடக்கும் அதிசயத்தினைக் கேட்டு
நவாலியூர் வாசிகளும் அண்டையூர் வாசிகளும்
வந்து குவிந்தார்கள் வரங்கள் மிக வாங்கவென்றே
தங்கவேலர் அங்கிருந்து தன் குருமுருகன் மேல்
பாமாலை பூவதையும் பார்த்தறிந்தாரெல்
[லோரும்
அவர் திருவாயால் வெளிவந்த வரியவருட்
[பாடல்கள்
அற்புதமானவையும் அளவிலடங்காதவையும்
கோவிலினுள்ளே சுவாமிக் கருகினிலே
எரியுமிரு விளக்குகளும் பூசை நேரமசைந்தாடும்
தந்திரத்தா லாடிடுதோ தானாக வாடிடுதோ
மந்திரத்தா லாடிடுதோ மாயவித்தை
[யோவெனவே
பரீட்சித்தோரு முண்டுநேரில் பார்த்துத்தெளிந்
[தோருமுண்டு
கோவிலுக்குக் கிழக்கே குருகுமணல் பரப்பினிலே
பூசை நேரந் தப்பாமல் போவாரே தங்கவேலர்
என்ன நடக்குதோ அதையுமறிந் திடுவோமே
கண்ணோட்டம் செய்தார்கள் கற்பூரம்
[கொளுத்துவதை
என்னதான் விசேஷமோ என்றுமே பார்வை
[யிட்டார்
கண்டார்க ளெல்லோரும் கனவாச்சர்யத்துடன்
சின்னக் குழந்தையின் சேவடி பதிந்ததையும்
வார்த்தையும் பகராமல் வாய்புதைத்து
[நின்றூர்காண்

சந்தேகம் வந்தால் சத்தியமும் மாறிவிடும்
என்றவுரைக் கிணங்க இன்னுமோர் நாளதனில்
வந்து பார்ப்போமே யுண்மையோ விதுவெனவே
எல்லோருங் கூடியே யிருந்தார்க ளூக்கமுடன்
பூசைக்கு முன்பும் பார்த்து வைத்தாரவ்விடத்தை
பூசை நேரமதில் போகும்போ துத்தபனர்
தொடர்ந்துமே போய்ப்பார்க்கத் துலங்கியது
[பொற்பாதம்
அந்த விடமதனில் அதேயளவு பாதமது
மீண்டும் பதிந்ததுவைக் கண்டார்க ளெல்லோரும்
சோதிக்க வந்தவர்கள் சோகமுடன் நின்றூர்காண்
வீறுப்புப் பேசியோர் விழுந்தார்க ளெல்லோரும்
செல்வச் சந்நிதியானின் சேவடி பதிந்ததுவோ
சந்நிதி வேலன்றன் சண்முகப் பாதமதோ
என்று பெருமிதத்துடன் புஷ்பமுஞ் சாத்திடுவார்
தங்கவேலர் தம்மைப் பார்க்கவந்து நிற்பவர்கள்
நெஞ்சில் நினைப்பதெல்லாம் பாட்டாலுணர்த்திடு
[வார்
வெட்கமுடன் நிற்போரும் வேதனைப் படுவோரும்
சந்தோஷ மடைவோரும் சாந்தி யடைவோரும்
எண்ணி லடங்காவே யெழுதிப் படிப்பதற்கு
தீரா விலையாளர் தீர்க்க வந்து காத்திருப்பர்
அடங்காத பேய் முனிகள், அடங்கி நிற்குமவர்
[முன்னே
நோய் பிணிக்காரரெல்லாம் நோயின்றி
[வாழ்ந்திடவே
பூசை முடிந்த பின்பு போடுவார் விபூதியினை
அருளாளர் தம்மழகை வர்ணிப்ப தெப்படியோ
வரம்பில்லாவருளைத்தான் அளவிடுவதெப்படியோ

குனித்த புருவமதும் கொவ்வைச் செவ்வாயதுவும்
பனித்த செஞ்சலடையழகும் பவளம்போல்
[மேனியதும்
இனித்த முடனேயெடுத்த இனியபொற்
[பாதமதும்
ஒன்று திரண்டவோர் அரிய திருவுருவை
கண்ணினுல் காண்பதற்கும் வாயார வாழ்த்திட
[வும்
பண்ணினுல் பாடிடவும் பாதம் பணிந்திடவும்
பணிகள் புரிந்திடவும், அருட்பாங்குகள்
[பயின்றிடவும்
தொண்டுகள் செய்திடவும் தூய்மை
[யடைந்திடவும்
இனியவரின் மழலைமொழி இதமாகக் கேட்டிடவும்
அன்பு கலந்திடவும், ஆட்கொள்ளப் பட்டிடவும்
நாம் மானிடராக வெல்லோ அவதரித்திட
[வேண்டும்
வேறொருநாட் பூசைநடந்து கொண்டிருக்கையிலே
தொங்கிடுமத் திரைதனிலே தோன்றியது பாம்பு
[ஒன்று
சிறிது நேரம் கழித்து மறைந்ததுவே யப்பாம்பும்
ஆச்சர்ய மடைந்தார்கள் அரோகரா
[வென்றார்கள்

பக்தர் - மருதலிங்கம்

சிங்கப்பூர்ச் சேவை செய்த ஓய்வூதியரொருவர்
ஈஸ்வர பக்தியென்ப தெள்ளளவு மில்லாதார்
சைவ ஒழுங்குமுறை சற்றேனு மில்லாதார்
மதுவகையும் வெண் சுருட்டும் அதிகமாய்ப்
[பாவிப்பார்
குற்றங்கள் மலிந்த குணமுடைய ராயிருந்தார்
மனைவி மக்கள் வந்து மனமாய் வழிபடவும்
மறுப்பார் அனுமதியை மாறுயும் பேசிடுவார்
மனையாளைத் தானதிகம் மனம் நோகப் பேசிடுவார்
செய்வதறியா மனையாள் முருகனையே வேண்டி
[நின்றுள்
முருகன் செய்யுமற்புதங்கள் முறையாக
[வாசித்தாள்
கழுதைக் குபதேசம் போல் காதிலே யேறவில்லை
வேறுவழி தோன்றுமல் முருகனிடம்
[பழிபோட்டாள்
அவனுடைய கருணையினுல் எண்ணமு மீடேறியதே
அவள் எண்ணியதையு மிங்கே யுரைத்திடுவேன்
[கேட்டிடுவீர்
அற்புதங்கள் செய்பவன்நீ, அவரையும்
[அழைத்திடுவாய்
என்பது வேயவள் எண்ணம்; ஈடேறியது
[மவ்வாறே
அப்பால் நடந்த அதிசயத்தைக் கேளுமினி
மருதலிங்கம் என்பவர் மனையாளின்
[வேண்டுதலால்

திடீரெனவே கோவிலுக்கு வந்து வணங்கி நின்றார்
அது கண்ட மனைவியார் அதிக மகிழ்ச்சியுடன்
முருகனைப் பலவாறுப் வாழ்த்தி வணங்கி நின்றார்
அதன் பின்னே மருதலிங்கம் அதிகசிரத்தையுடன்
அடிக்கடி வருகை தந்து அறிந்தாரே முருகனையும்
வேறொருநாள் பூசையில் கும்பிட்டு நிற்கையிலே
பக்தி தானரும்பியதோ விழுந்தார் காண் விம்மி
[விம்மி
சிறுநிமிட நேரமதாய் விழுந்தாரே மூர்ச்சையற்று
படுத்திருந்தார் சிலநேரம் பின் எழும்பினார்
[குரல்விட்டே
அப்பா! அப்பா! எனவே அலறியபடியேயிருந்தார்
அருகில் நின்ற பக்தரெல்லாம் அதிசயித்து
[நின்றார்கண்
காரணந் தெரிந்திடவே காத்து நின்றார் சிலபேர்
குழந்தை வடிவேலவனைக் கையில் வேலொன்றுட
[னும்
பணித்த வெண்சடையுடனும் நிர்வாண மாகவுமே
கண்டாராம் காட்சிதனில் காதல் மேலிட்டது
[வாம்
பித்துப் பிடித்தவர் போல் பக்தி கொண்டாடிடுவார்
தான் கண்ட முருகனையும் சுற்றியுள்ள காட்சியை
[யும்
திரையொன்றில் சித்தரித்துத் தொங்கவிட்டார்
[முன்பாக
நாளுக்கு நாளாக வளர்ந்து வந்ததே கோவில்
இடவசதி போதாமல் இடித்தார்கள் குசினியையும்
போட்டார்கள் புதிதாய்ப் பெரிய கொட்டகை
[யொன்றை

மடப்பள்ளியு மொன்று வமைத்தார்க ளுதற்கப்
[பால்
காட்சிகண்ட பக்தருமக் கொட்டகையில் தான்
[துயில்வார்
அப்பா! அப்பா! எனவே அரற்றுவார் கனவினிலே
நோய் பிணி தீர்ப்பதற்கும் அக்கொட்டகையில்
[தான்படுப்பார்
தங்கவேலர் என்ற திருநாம முடையவரும்
கதிர்காமத்தையனல் ஆட்கொள்ளப் பட்டவரும்
இளமை குன்றுதவரும் அழகு குன்றுதவரும்
சிறப்புகள் மிக்கச் சித்தி பல பெற்றவரும்
பொய்மை யென்பதில்லாத புனிதவுருக் கொண்ட
[வரும்
திருவாக்குடையாரும் தீமையில்லாதவரும்
செய்துவந்த அற்புதங்கள் சொல்லில் அடங்
[திடுமோ
பிரமிக்கச் செய்யும் பெரிய பாடல்களெல்லாம்
அலை அலையாகவேதான், அவர்வாய் வெளிவருமே
மருதலிங்கம் என்ற பக்தர் ஆரம்ப நாட்களிலே
அம்மையார் என்றழைப்பார் அரிய வுத்தமனரை
சிலநாட்கள் சென்றபின்பு குருவேயென் றழைத்
[திடுவார்
நாளடைவில் அவரை முருகனென்றே யழைப்பார்
சிலநாட்கள் சென்றபின்னர் அப்பா என்றழைத்
[திடுவார்
பக்தர் அழைப்பது போல் மற்றோரும் அழைத்திடு
[வார்
முருகா வென்றழைப்பார்கள் சிலர் அப்பா
[என்றழைப்பார்கள்

இவ்விதமாக வருள் வளர்ச்சி பெற்று வந்திடவே
பாடிப் பணிந்திடவே பக்தர் பலர் சேர்ந்து
[வந்தார்
வாத்தியக் கோஷ்டிகளும் பஜனைக் கோஷ்டிகளும்
பல கன்னியருங் காளையருந் தொண்டுகள்
[செய்யவென்று
வந்துமே சேர்ந்தார்கள் வாழ்வு வளம்
[பெற்றிடவே
கோவிலிடம் போதாமல் விஸ்தரிக்க வேணு
[மென்று
வீட்டையு மிடித்தார்கள் கெங்கை வெட்ட
[வேணுமென்று
தாவாரமு மொதுக்காத் தபசிகளானுர்கள்
தேவாரந் தேவையில்லாத் தேவுக்களானுர்கள்
இவ்விதமாகவே யிருந்து வரும் நாளையிலே
பல தொழில்கள் செய்து வந்த பழைய கணவரவர்
பூசாரி என்னும் பொறுப்பேற்க வந்தது காண்
விட்டார் வியாபாரம், வெறுத்தார் வெறும்
[வாழ்வை
சிவ வாழ்க்கையேதான் சிறப்பான தென்றறிந்
[தார்
பூசாரியானுர் பூவுலகோர் வாழ்ந்திடவே
சிறப்புகளும் கீர்த்தியும் அடைந்தனவே யலரை
குடும்பமா யிருந்தவர்கள் குருகுலத் தோராகி
தேவுக்களாகித் திருவிழா நடைபெறவே
வானவர் தேவரெல்லாம் வந்துறவாடுவர் காண்
கண்கொள்ளாக் காட்சிகளைக் காண்பதினி
[யெக்காலம்
தீராவினைகள் பல தீர்த்தவர்களாயிரம் பேர்

வேண்டிய பலவரங்கள் பெற்றவர்களாயிரம் பேர்
காவடிகள் பலவாடும் கதிர்காமத் தினங்களிலே
தேவதைகள் பலவாடும் தேவசேனபதி முன்பாய்
வேய்ப்புக் கெடுபடான் வேல்முருக னென்று
[சொல்லி
செய்வினைத் தகடுகளும் சேர்த்துமே யெடுத்து
[வந்து
சொல்லிய படியே குறித்த தவணையதில்
வெருண்டோடும் வேகமதாய் வேலவன்
[நெருப்பெனவே
ஆராலுமகற்றவொண்ணு ஆவியுமொன்று வந்து
அன்புடனே யணுகி யுந்தன் அன்புக்காகவே தான்
அகல்கின்றே னல்லாது யாருமென்னை அகற்றுவரோ
என்று பணிந்து நின்று வகன்றதுவே நன்றியுடன்
இவ்விதமாகவே யிருந்து வரும் நாளையிலே
கோவிலுக்கெனவோர் கிணறு இல்லாதமையால்
கெங்கைக்கிடம் பார்த்துக் கோலினரோரிடத்தை
குருமுருகன் தனைப்பெற்ற கோதையவள்
[தெய்வானை
குளறி யழுதிடுவாள் குடியிருக் கேலாதெனவே
எரித்துண்டு வாழ்வதற்கு இடமில்லையென்று
[சொல்லி
இவளுமெரித் துண்பதற்கு இடமொன்று
[கோலினர்காண்
குருமுருகன் கோவிலினுள் பாடிக்கொண்டிருக்
[கையிலே
கேட்பார்கள் கூட்டமதில் தெய்வானையு மிருந்
[தாள்
தெய்வானையின் தேகம் திடுதிடெனவே நடுங்கி

ஆவேசக் கலையொன்று அதிசயமாய் வந்ததுகாண்
பாடிக் கொண்டிருந்த வரும் பார்த்திடவே
[வந்தார்காண்

பூசாரியுமப்போ திருந்தாரே யவ்விடத்தில்
விசாரியென்னூர் முருகன் விபரங்கள் யாரெனவே
விசாரித்தார் பூசாரி விளம்பிடவே வேணுமென்று
நான் வள்ளியம்மனென்று வுரைத்ததுவே
[தேவதையும்

கெங்கை வெட்டுதற்குரிய விடத்தையும்
[காட்டியதே

கெங்கை கட்ட வுத்தரவு இட்டார் குருமுருகன்
பூசாரி யிணங்கவில்லை யிடமும் போதாதெனவே
தீர்த்தக் கிணறுதான் தேவையிப்போ தென்று
[சொல்லிக்

கட்டினர் கிணறுகக் கற்களும் மிக வரிந்து
ஆறு மாதங்களுக்கும் அதிகநாட் செல்லுமுன்பே
கட்டிய கிணறும் கட்டுகளெல்லா முடைந்து
மூடுப்பட்டது கிணறு முன்னிருந்தது போல
தெய்வ வருள்வாக்கைத் தட்டி நடந்தமையால்
கையுடனே பலனைக் கண்டார்க ளெல்லோரும்
பூசாரியு முணர்ந்தார் பிழைக்குமிக வருந்தி
தேறினர் மனதில் கெங்கைதான் தேவையென்று
தீர்த்த மாடுவதற்கும் தேவை கெங்கை
[தானெனவே

உத்தரவு பிறப்பித்தா ருள்ளவர்களுக் கெல்லாம்
கட்டிடவே வேணுமென்று கனக்கவே முயற்சி
[செய்தார்

எண்ணியது மெண்ணியவா றெளிதாய் முடிந்தது
[காண்

மருதலிங்கம் பக்தர் மகிழ்வுடனே தானிருந்தார்
குருமுருகன் றன்னைக் குருவாகக் காண்பதற்கும்
முருகாவென் றழைத்திடவும் காரண
[முரைத்திடவோ
கேண்மின்கள் நீவிரெல்லாம் குருமுருகன் முன்பாக
என்றேவொரு நாளில் எல்லோரும் பார்த்திடவே
கண்டாராம் காட்சியொன்று கண்ணீர்
[பெருகியதாம்
விம்மிவிம்மி யழுதாராம் விழுந்தாராம்
[பாதமதில்
என்குருவே யப்பா! வென்றெழுந்தாராமதன்
[பின்னே
காட்சியது என்னவோ? என்று வினவிடவே
குருமுருகன் தோள்மீது குழந்தை வடிவேலன்
பச்சை மயிலேறிப் பாங்குட னிருந்தாராம்
மூக்குக் கண்ணுடியுடன் முன்பாயிருக் கையிலே
திருக்கையினு லெடுத்துத் திருமுகத்திலே
[யணிந்தார்
கொடுத்தாரதன் பின்னே பக்தரு மணிந்திடவே
வாங்கினர் பக்தர் போட்டார் முகத்தினிலே
பார்க்கத் தெரியாமல் பார்வை மிகக் குன்றியதே
எடுத்தார் மறுபடியும் எல்லாம் தெரிந்திடவே
ஆச்சர்ய மடைந்தார் ஆனந்தம் மேலிடவே
கண்கொடுத்த தெய்வமே யென்றே யலறலுற்றார்
கண்ணுடியினி வேண்டா முனக்கே யர்ப்பண
[மென்றார்
இப்படியே சிலநாட்கள் இன்பமுடன் சென்றபின்பு
கொட்டகையுட் சுவாமிக்குக் கோயில் கட்ட
[வேணுமென்று

முயன்றார்கள் பலவாறாய் முழுமூச்சுடனே தான்
அத்திவாரம் போட்டார்கள் அளவாகக்
[கோவிலுக்கு
கட்டி முடித்தார்கள் கற்களும் மிகவிரிந்தே
மூலஸ்தானக் கோவில் கட்டிமுடிந்தது காண்
அவ்வளவோடு நிற்க அம்மன் கோவிலைத்தான்
அவசரமாய்க் கட்டி அமைத்திடவே
[வேணுமென்று
முயற்சி யெடுத்தார்கள் முடிந்தது காணப்படியே
வள்ளியம்மன் றன்னருளே விளக்கிடவே
[வேணுமென்று
வள்ளிக்கொடியு மொன்று முளைத்ததுவே
[முன்பாக
கண்டேயதி சயித்தார் காணவந்தோர்
[களெல்லாம்
பக்தி மிகுந்திடவே பாடிப் பணிந்திடுவார்
தெய்வானை மீதும் கலிகொள்வாள்
[வள்ளியம்மன்
பாமர மக்களும் பாவிகளு மெல்லோரும்
புண்ணியனைக் கண்டு புதுமையாய் வாழ்ந்திடவே
வழிகாட்டி வந்தாள் வள்ளியம்மன் தானும்
நோய் பிணியால் மெத்த நொந்து வருவோர்க்கு
ஆறுதல் கொடுத்து ஆற்றிவைப்பா ளம்மையவள்
இப்படியே யிருந்து வரும் நாட்களிலே
ஆறுமுக சுவாமிக்கும் அத்திவாரம் இடவே
அதிக முயற்சி செய்து ஆரவாரத் துடனே
அன்பர்களுக் கெல்லாம் அறிவித்தல்தான்
[கொடுத்து
காசுகள் சேர்த்துக் கூடவும் தொடங்கினரே

அத்திவாரம் வெட்டுகையில் அனல்மிக்கத்
[தீப்பொறிகள்
அங்கிருந்து பறந்திடவே அதிகபயங் கொண்டார்
[காண்
ஆறுமுகப் பெருமானின் அடையாளந்
[தானெனவே
அச்ச மிகுதியுடன் ஆசாரம் தப்பாமல்
திருப்பணிகள் செய்வோர்கள் திறமாகவே நடப்பர்
தொண்டுக்கெனப் பலபேர் சேர்ந்தே யிருந்தாலும்
தொண்டர்கள் மூவர் திறமுடனே தாணிருந்தார்
சீர் பலவும் பொலியச் சிறப்பாயிருக்கையிலே
பூசாரி முருகனுடன் சென்னூர் கதிர்காமம்
தொண்டன் மகேந்திரனுஞ் சென்னுனவர்களுடன்
வந்தவல் வினைநோயால், வருந்தினன்
[மகேந்திரனும்
கூட்டிச் சென்றகுரு, குணமடையச் செய்தார்
[காண்
பூசை விதிமுறைகள் பயிற்றவே வேணுமென்று
பூசாரியைக் கூட்டிச் சென்னூர் குருமுருகன்
சகலதும் கற்றுவந்து, சாதுரிய முடனே
பூசை, திருவிழாக்கள், புதுப்பொலிவுடனே
[செய்தார்காண்
மூன்றுவது முறையும் சென்னூர் குருமுருகன்
கதிர்காமத்திற்குக் கந்தன் கருணையுடன்
பாடிப் பணியுமிரு பக்தர்களுங் கூடவேதான்
ஒருவர் மருதலிங்கம், மற்றவர் செல்வரத்தினம்
பாடுவாரொருவர், வீணை வாசிப்பாரொருவர்
மாண்பு மிகவுடைய மாணிக்கக்கங்கை தனில்

நீராடிய பின்னர் நிழலில் இருக்கையிலே
இனந்தெரியாத விரு வெண்ணிறத்துக்
[கன்னியர்கள்
வெண்மையுடை தரித்தவர்கள் முருகனை
[யணுகினர்காண்
எண்ணெய்ப் பாத்திரமொன்றும் இருந்ததுவா
[மவர்கையில்
ஒருவர் கரங்கொண்டு குருவின் சிரசைப்
[பிடித்தார்
மற்றவர் பூசினர் எண்ணெய் மிகக்குளிர
வகிந்தார்கள் சடையை வாரி முடித்தார்கள்
அப்போது கண்டார்கள் அடையாள
[மொன்றினையும்
அதிசயித்தார் மெத்தக் கதைத்தார்க
[ளிருவருமாய்
பாஷை புதுப்பாஷை யென்று, பக்கம் நின்றவர்
[கள் சொன்னர்காண்
இவர் சாதாரணவரல்லச் சத்தியவரென்று
[சொன்னர்
வேறு கணத்தைச் சேர்ந்த வைராவி யென்று
[சொன்னர்
அற்புதம் நிறைந்த அவதாரம் என்று சொன்னர்
பின் குருமுருகனை நோக்கி குறைகள் பல கூறினர்
[காண்
உந்தன் உடலை உருக்குலைய விட்டனையோ
நாடி நரம்புகள் சுருங்கி நாசமாய்ப் போயினவே
சுவரிருந்தாலல்லவோ சித்திரத்தைப் பார்த்திட
[லாம்
மன்னுயிர்கள் வாழ்ந்திடவே வளர்த்திடுவா
[யுன்னுடலை

நம்பியிருப் போர்களுன்னை நன்னெறிப்
[படுவாரோ
தங்களது கண்டனத்தைத் தெரிவித்தா ரிருவருமே
இன்னமுஞ் சொன்னார்கள் நின்றவிருவர் பற்றி
நம்பி வந்தாரிருவர் நட்டாற்றில் விடுவதுவோ
கவனிக்க வேண்டும் கனக்கவே யவர்களையும்
என்றுமே சொல்லியபின் ஏகிமறைந்தார் காண்
இதுபோல வேறொரு நாளிருக்கும் பொழுதினிலே
சேரவே வந்தனவாம் சோடிப் புறுக்களங்கே
குருமுருகன் மடிமேல் கூடி விளையாடினவாம்
முருகன் ஊர்வரும் போதே வந்தனவா
[மவ்விரண்டும்
அப்புறுக்களின் சந்ததிதான் இன்றுமிருப்பனவாம்
குருமுருகன் கோவிலிலே கூடுகட்டி வாழ்வனவாம்
இவ்விதமாய்க் கோவில் சிறப்புடனே நடக்கக்
குருமுருகனும் மெத்தக் குதூகல மாயிருந்தார்
பருவ வயதுடைய பண்பு மிக்கக் கன்னியொன்று
தான் படித்து அறிந்தவற்றைப் பயன்படுத்த
[வேணுமென்று
தொண்டுகள் செய்து தூய்மைபெற வேணுமென்று
கோவிலுக்கு வந்து குருவோடிருந்தது காண்
தீர்க்க தர்சியினுடைய தீர்க்க தெர்சனங்கள்
வகையுடனே யெழுதி வைத்திடுவாள் கன்னியவள்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டைம்பத்
[தெட்டினிலே
அமைதி மிகுந்த வரியதோர் நன்னாளில்
குருமுருகனுர் தம் தீர்க்க தர்சனத்தைக்
குறித்து வைத்திடுமாறு பணித்தாரக் கன்னியை
[யும்

ஆங்கிலத்தில் எழுதி வைத்த வரிய
[தெரிசனத்தைத்
தமிழ் வார்த்தைகளாலே விளக்கிடுவேன்
[கேட்டிடுவீர்
அப்பனுடனே அதிக சம்பந்தமுள்ள
ஆண் ஆத்துமாவொன்று அருகில் வந்து
[சேருமிங்கே
அவனுடைய அடையாளம் அறிந்திடுவீர்
[சொல்லுகிறேன்
விவேகியவன் காண் விவாகம் இன்னும்
[செய்யவில்லை
பதிலாக என்னையே விவாகம் செய்து கொள்வான்
சிறுநெறியில் வாழ வெட்கிப் பெருநெறியில்
[வாழ்ந்திடுவான்
பிரம்ம மாவதற்கும் பக்குவம் உடையவன் காண்
இலங்கையில் கதிர்காமனுறை பதியாமிவ்
[விடத்திற்
கின்னும் வரவில்லைத், தவறுவனு இல்லைஇல்லை
என்ற படியே இருந்ததாமப் பதிவு
கோவிலிலுள்ளவர்கள் குறிப்புடனே
[பார்த்திருந்தார்
யாரோ எவரோ எங்கிருந்து வருவாரோ
என்ற விதமாக இருந்தார்க ளெல்லோரும்
மருதலிங்கம் பக்தர் மதியற்றவர் போலத்
தன்னைத்தான் குறித்திருக்கு வென்னூர்
[குருவினிடம்
குமிண் சிரிப்புடனே குருமுருகன் சொன்னார்காண்
உனக்கிது குறிப்பல்ல வுன்குறிப்பைச்
[சொல்வேன் கேள்

என்றவுரையும் எழுதிவைத்தார் ஏட்டினிலே
அதனுடைய சாரம் அறிந்திடுவீர் சொல்லுகிறேன்
மின்சாரமுந்தான் மின்னிமின்னி மறைந்திடுமே
உந்தனுடலும் மறைவதுவோர் காரியமோ
என்னுடனே நீ கோபித்தா லாவதென்ன
பேத்தியடை பிடவைதான் விலைப்படாதென்று
[சொன்னர்.

வசனம்

அஃதோ வெப்படியென்றால், குருமுருகனிடம் மருதலிங்கம் பக்தரானவர், ஆங்கிலத்தில் குறிப்பிட்ட தீர்க்கதர்சனம் தன்னையே குறிப்பது வென்றுசொல்ல, குருமுருகன் ஏமாராதவராய் அக்குறிப்பு உன்னைப் பற்றியதல்ல, உன் குறிப்பைச் சொல்லிடுவேன், இனிக் கேட்பாய் என்று சொல்லுவாரானர். அந்தக் குறிப்பின் சாராம்சம் என்னவென்றால்: மருதலிங்கம் பக்தரானவர் சொழு, சொழுத்த, மழைபோன்ற மழைக்குண முடையவராய், இடை இடையே மனம் மாறிய நிலையில் வீட்டோடு கோவிலுக்கு வராமல் நிற்பார். பின்பு திடீரென ஒரு நாளைக்கு அழுது கொண்டு வருவார், குருவுடனே கோபம் பாராட்டும் குணம் இருக்கையில், அவருடைய உடல், பொருள், ஆவியைக் கடவுளுக்கு விற்க முடியாதென்பதும், உடற்பந்த மிருக்கும் வரை முன்னேற்றமில்லையென்பதும், மற்றவரைப் போன்று மரணமடைவாய் என்பதாகும்.

ஞானியார் குடிமக்கள் வரலாறு

நவாலி தெற்கிலுள்ள பவுரனென்னும் பகுதியிலே
நல்ல குடிப்பிறந்த ஞானியார் பரம்பரையில்
வந்த பெண் தங்கம்மாள் புருடன் சரவண முத்தர்
வந்திடுவார் கோவிலுக்கு வழிவகை யெலா
[மறிந்து
மக்கள் நால்வர் மகவாசை தீர்க்க வந்தோர்
இருவரே ஆண்மக்கள் இருந்தார வர்களுக்கு
மற்றவர் களிருவர் தோற்ற மறைவானேர்
முருகனிடம் முதியோர்கள் இருவரும் வந்த பின்பு
புதிய பெயரிட்டார் பூசாரி யாரவர்கள்
ஞானரப்பா எனவும் ஞானரம்மா எனவும்
அழைப்புப் பெயராச்சு அறிவார்க ளெல்லோரும்
மூத்தான் பெயரைச் சபாவென வழைத்திடுவார்
இளையான் பெயரைச் சிவமென வழைத்திடுவார்
ஆசார முள்ளவர்கள் அன்புப்பணி செய்பவர்கள்
வழிபாடு செய்பவர்கள் வறுமைமிகப் பட்டவர்கள்
உறவோர் களானுர்கள் உண்மை யுடனேதான்
பூசாரியு மதிகம் போவாரவர் களிடம்
கொடுத்து வாங்கிடுவார்கள் குதூகலித்திடுவார்
[கள்
இவ்விதமே யிவர்கள் இருந்து வரும் நாளில்
தூரப் பயணத்தில் தொழில் செய்து வந்த மகன்
இளையான் சிவமென்பான் ஊருக்கு வந்திடவே
பூசாரி சண்முகமும் போயிருந்தா ரந்நேரம்
தாயவள் ஞானரம்மா அறிமுகம் செய்து
[வைப்பாள்
தம்பி யிவர்தான் சாமியார் சண்முகமாம்

எங்கள் குலதெய்வம் குருமுருகன் கோவிலுக்கு
பூசைகள் செய்து வரும் பூசாரியாரெனவே
பார்த்துக் கொண்டார்கள் ஒருவரையொருவர்
[நேரில்
பேசியும் கொண்டார்கள் பலமணி நேரமதாய்
ஏனென்று கேட்பீரோ வுரைத்திடுவேன்
[கேட்டிடுவீர்
இளையான் சிவமென்பான் இறைபக்தி யுள்ளவன்
[கான்
காந்த சக்தியுள்ளவன் கான் கான வினிப்பவன்
[கான்
நல்லாரின் நன்மை நல்லோர்கள் தானறிவார்
நல்லாரிணக்கம் நலமுடனே யிறுகியதால்
தொடர்ந்தான் சிவமுடனே தூய்மையுடன்
[கோவிலுக்கு
கண்டான் குருபரனைக் காதலு மரும்பியதே
பூசாரியும் குருவும் மிகவுபசரித்தார் கான்
தங்கிவிட்டான் சிவமும் தன்னிஷ்டம் போலவே
[தான்
அப்போது குருமுருகன் பாட்டா லுணர்த்திடு
[வார்
தின் தம்பியென்று தீராத வாசையுடன்
பேணி வளர்ப்பாளே பெற்றவளென் செய்வாளோ
பிள்ளை வெறுத்திட்டால் பொறுப்பாளோ
[வுள்ளமதில்
என்ன சமாதானஞ் சொல்லுவதோ வறியேன்
என்ற விதமாக எத்தனையோ பாடல்கள்
காற்றோடு காற்றுகப் போயினவே யவமாய்
குறித்தது அவனையென அவனுமறியான் கான்

ஏனென்ற காரணத்தை எடுத்துரைப்பேன்
[கேட்டிடுவீர்
தீரன் குருமுருகன்றன் தீர்க்க தெரிசனங்கள்
பின்னுல் நடப்பவற்றை முன்னேயறி விப்பன
[வாம்
எதிர் பார்த்திருந்தானே இப்படியும் நடக்கு
[மென்று
பக்தியுட னவரும் பாடுகிறார் போலுமென்று
அலட்சிய மாகவேதான் இருந்தான் காணந்
[நேரம்
அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்த மையால்
அதிகம் நாள் நிற்பதற்கு அவகாச மில்லாமல்
போக நேரிடும் போது பெரிய மனவருத்தமுடன்
செல்வான் காண்மறுபடியும் செல்லுமிடம் நோக்கி
அங்கு சென்ற பின்னர் அதிகம் நாள் நிற்காமல்
அடிக்கடி அவனும் அணுகுவான் கோவிலுக்கு
தாயாரும் தந்தையரும் வயோதிப காலமதில்
வசதியுடன் வாழ்ந்திடவே வீடுகட்ட வேணுமென்று
கட்டுவித்தான் வீடொன்று கற்களும் மிகவரிந்தே
நாளுக்கு நாளாக ஞானமும் முதிர்ச்சிபெற
வாழ்க்கையில் சற்றும் விருப்ப மில்லாதவனுய்
விட்டுவிட்டான் கட்டுவதை வேண்டாம்
[வீடெனவே
அவன் குறிப்பையறிந்த அடியவர்க ளிருவருமாய்
நல்ல புத்தி கூறிடுவார் நன்கு புலப்படவே
எந்தக் காரியத்தையும் இடைநடுவே
[விடுவதென்றுல்
இழுக்காமே யுந்தனுக்கு ஏற்றமில்லையே யிதனுல்
தொடங்கியதை முடித்திடுவாய் துணிந்திடுவாயிக்
[கணமே

பெற்றோர்கள் மனம் குளிரப் பூர்த்திசெய்வாயதனை
என்றுமே வற்புறுத்தி யிருவருமே சொன்னார்
[காண்
தூண்டுகோலாகத் தூயவர்களி ருவருமாய்
சிரத்தை மிகக் கொண்டார்கள் சீரழிந்து
[போகாமல்
கந்தன் கருணையினால் கட்டியும் முடிந்ததுவே
பொங்கல் முறைசெய்து புகுந்தார்கள் குடியிருக்க
ஆரம்பமுதல் நாள் அங்கொருவரும் செல்லவில்லை
ஆசாரி மாரும் அன்பர் அடியார்களுமே
கூடிக் கொண்டாடிக் குதூகலித்தார் மெத்த
அதன் பின்னர் சிவமென்பான் அதிக சந்தோஷ
[முடன்
கோவிலுக்குச் சென்றிடுவான் குதூகலமாயிருப்
[பான்
வேலைக்குஞ் சென்றிடுவான் வேதனை மிகவுடனே
வேலையை விடுவதற்கும் விரும்பினன் வெகுவாக
கடன்களும் மிகவுண்டு கட்டிடவே வேணுமென்றார்
நேர்மையே மிகப்பெரிது நிமிர்ந்து நடப்பதற்கு
கட்டி முடியும்வரை உழைத்திடவே
[வேணுமென்றார்
பெற்றோர் மிகப்பயந்தார் பிழையின்றி
[வாழ்வதற்கு
உடலங்கு முயிரிங்கு மாயிருப்பான் சிவமும்
இவ்விதமாக இருந்து வரும் நாளையிலே
கனவினில் காண்பானும் குருமுருகன்
[றன்னுருவை
நித்தமும் காண்பானும் நிமலனுருவ மதை
காரணம் தெரிந்திடவே வந்தானும் கோவிலுக்கு

கேட்டானும் முருகனிடம் கனவின் பலன்பற்றி
அப்போது குருமுருகன் அவனிடம் சொன்னர்
[காண்
என்னை நான் சொல்வதுவோ கேட்டறிவாய்
[பக்தரிடம்
என்ற மொழி கேட்டு எதிர்கொண்டு பக்தரிடம்
கேட்டான் சிவம் பலனை நன்மையோவென்று
[சொல்லி
திருமேனி காண்டல் திறமான பலனலவோ
உண்மையுடனே நீ உத்தமனைத் தேடுவதால்
அவதார மெடுத்து வந்த அற்புத வுருவமதை
காட்டினை னுந்தனுக்குக் கடைத்தேறும்
[மார்க்கமதாய்
என்று பொருள் கூறி முடித்தாராம் பக்தரவர்
அந்த மொழி கேட்டு அதிசயமுடனே சிவமும்
பற்றி நின்ருன் குருவைப் பரவசம் மிக வெய்தி
மேலும் அறிந்து கொண்டான் முற்சென்மத்
[தொடர்பினையும்
முனிவனு யிருந்ததையும் முன்செய் குறைத்தவத்
[தினையும்
பூர்த்தி செய்ய வந்ததையும் புண்ணியனைக்
[கண்டதையும்
ஏட்டில் குறித்ததுவும் இன்றுகாணப் பெற்றதுவும்
எல்லோருமே யறிந்தார் இவர்தானவ் வாளெனவே
பூரிப்படைந் தார்கள் புதுமையுடனே தான்
அதன் பின்னர் சிவமென்பான் பித்துப்
[பிடித்தவன்போல்
உலகையே மறந்திடுவான் உய்யும் வழிதேடி
கற்றிடுவான் நன்னூல்கள் காதலுடனே தான்

சிவவாழ்க்கையின் சிறப்பைச் சிறிது மறியான்
[காண்
அறிந்தானுடல் வாழ்வு அத்தனையும் பாழெனவே
பாவியா யிருந்துலகில் பாவமதைப் பயிலாமல்
உயிர் நீத்தலுத்தம மென்றுணர்ந்தானு மப்போது
துணிந்தானுடல் மாய்க்கத் தோன்றியது புத்தி
[யொன்று
நல்ல தொண்டாற்றிய பின் நசித்திடலா மிவ்வுடலை
என்பதுவா மவன்புத்தி ஏகினன் கோவிலுக்கு
கூறினன் குருவினிடம் கொண்டதன் கூற்றினையும்
கேட்ட குருமுருகன் கெடுபுத்தி யீதென்றான்
ஆராய் வில்லாத அவசர முடிவுகளை
விட்டிடு வாயினிமேல் விவேக முடனேதான்
குற்றமற்ற வாழ்க்கை குறைவின்றி வாழ்ந்திடலாம்
சிவமாகி நீயும் சிவகதி யடைந்திடலாம்
அறவாழ்வு வாழ்ந்திடலாம் அன்பர்பணி
[செய்திடலாம்
நல்வழி நாடுவோரை நன்னெறிப் படுத்திடலாம்
தணியாத நோய்பிணிகள் தணித்திடலா
[மெந்தனைப்போல்
தகுதி யுனக்குண்டு தவமுமுண்டே யறிவாய்
அறிவு முண்டு வுந்தனுக்கு அவமாக் கிடலாமோ
அறிவுக்கு வேலைகொடா வற்பர்கள் செய்து வரும்
அற்பமாந் தொண்டினை நீ அற்புதமா யெண்ணுதே
செய்வாயோ சத்தியமும் செய்யேன் தற்கொலை
[யெனநீ
அப்படியே செய்திடுவேன் ஆணையிட்டேனுன்
[மேலே
என்று சொல்லிக் குருவின் இனியபொற்பாத
[மதைப்

பற்றியே யழுதான் பக்திப் பரவசமுடனே
ஆனந்தக் கண்ணீர் அலைஅலையாய்ப் பெருக
அப்பனே யினிநான் அர்ப்பணமுனக் கென்றுன்
விட்டுவிட்டான் வேலையையும் வேண்டாமினி
[யெனவே
உடலை யலங்கரிக்கும் உள்ளவாடை யணிகளெல்
[லாம்
உடைமைப் பொருள்களுடன் ஒப்படைத்தான்
[குருவிடமே
வேலைத் தலத்து அதிகாரியிட மிருந்து
வேலையை வந்தேற்கு மாறுத்தரவும் வந்ததுகாண்
வாசிக்கவு மில்லை வாசித்தோர் மற்றோர்கள்
போட்டாலெரு புறத்தில் பொருட் படுத்தாமலே
[தான்
அதிகாரியவன் வந்து அவனுடைய பெற்றோரை
அணுகி யறிந்துகொண்டான் அணுவளவுந்
[தப்பாமல்
காணவந்தான் சிவத்தைக் கண்டானவன் கோலம்
உபசார மேதுமின்றி உறுதியுடன் நிற்பதையும்
வார்த்தை களதிகம் வளவளக் காமலேதான்
அடக்கமுடன் நின்றதையும் அவதானித்
[தானவனும்
எதிர் வார்த்தை கூறுமல் ஏகினுன் கவலையுடன்
காரணமுங் கேட்பீரோ கரவாமல் சொல்லிடு
[வேன்
அதிகாரி யவனும் அறிவான் சிவமியல்பை
நம்பிக்கை யுள்ள நற்குண வானெனவே
நன்றி யறிதலுள்ள நல்லநட் புடையவனும்
தன்னுட னிருந்ததையும் தானன்பு வைத்ததையும்

உதவியா யிருந்ததையும் உன்னிஞ் ஞுள்ளமதில்
இவ்வா றிருக்கச் சிவமுடைய தாயவளும்
கண்டாள் கனவினிலே கவலுதரும் காட்சி
[யொன்று
ஆறுமுகனுல் அவனும் ஆட்கொள்ளப் பட்டதுவும்
பிள்ளையை யிழந்ததுவும் பிரிந்து மனம்
[நொந்ததுவும்
எவ்வித மென்று உரைத்திடவோ இன்னமுந்தான்
கைக் குழந்தையாய்ச் சிவத்தைக் கரத்தினில்
[தாங்கிவந்து
குருமுருகன் கோவிலையும் கும்பிடவே வந்தாள்
[காண்
ஆறுமுக சுவாமியின் அற்புத வாசலிலே
குழந்தையைத் தானிறக்கிக் கும்பிட்டு
[நிற்கையிலே
குழந்தை கோவிலுக்குள் குடுகுடென வோடிய
[தாம்
பிடிக்கவும் முயன்றுளாம் முடியவில்லை யாமவளால்
கவலை மிகக் கொண்டாளாம் கண்ணீரு மோடிய
[தாம்
என்பிள்ளையைப் பிரித்துப் போட்டாயோ
[வாறுமுகா!
பெற்றெடுத்த வென்னுள்ளம் பதைக்குதே
[யென்றழுதாள்
வெகுநேரம் காத்து நின்றும் விடவில்லை
[யாமவனும்
ஏமாற்றத் துடனே ஏகினளாம் வீடதற்கு
இவர்கள் சரித்திரங்கள் இவ்வள வோடுநிற்க
குருமுருகன் கோவிலிலே நடப்பனவை
[யாராய்வோம்

முருகன் கோவில் வரலாறு

கட்டிடங்கள் பூர்த்திசெய்யக் காணி
[போதாதெனவே
பக்கத்துக் காணிதன்னில் பரப்பொன்று
[வாங்கினர்காண்
வாங்கிய விதமும் வகையுடனே சொல்லுகிறேன்
அடியார் கட்குரிய அயற்காணி யொன்றினிலே
இரண்டு பரப்பு விற்றே யொருபரப்பு வாங்கினரே
கட்டிட வேலைகளும் கனமாய் முடிந்தனவே
இவ்விதமாய்க் கோவில் இருந்து வரும்
[நாட்களிலே
எதிர்வீட்டுப் பெண்ணொருவர் இருபத்தொரு
[பேய்களினுல்
செய்வினை யிலுத்தரித்துச் சேர்ந்தார் முருகனிடம்
அவள் வருமுன் அனேகர் மாந்திரீகங்கள்
[முதலாய்
வைத்தியங்களும் செய்து வலுவாய லுத்தார்காண்
கண்பார்வையு மிழந்தாள் கனசத்திர சிகிச்சை
[யினுல்
வந்துமே யாடினுள் வடிவேலன் முன்பாக
ஏவிவிட்டோர் கண்டார் இவள் இருந்தாடுவதை
திருப்பிவிட்டால் பிழையென்று தெரியுமே
[யவர்களுக்கும்
செய்தார்கள் மறுபடியும் திரும்பி வராதபடி
வீட்டு வாயிற்படியின் கீழேயொளித்து வைத்தார்
கையுடனே பலனைக் கண்டார் குருமுருகன்
வினவினுர் தேவதையை வித்தியாச மென்ன
[வென்றே
காட்டியது தேவதையும் தாட்டுவைத்த
[ஆளினையே

பஸ்வண்டிக்கு நின்ருர் பார்க்கு முன்பே
[யோடுதற்கு
கலக முண்டாகாமல் கட்டளையிட்டார் முருகன்
தேவதைக்கும் தவணை கொடுத்தார் ஒருகிழமை
கருணைவேள் கந்தனவன் காருண்யமும் விளங்க
ஒருகிழமை சென்று எடுப்பித்தார் செய்வினையும்
அவள் கணவனுங்கூட இருந்தான் கோவிலிலே
பிரிக்கவென்று செய்தவினை பிரிந்தால்தான்
[தீருமென்று
அவளின் சம்மதம் கேட்டார் அவன் பிரிந்து
[போவதற்கு
அவளும் சம்மதித்தாள் அதனுல் புருடனவன்
வேறுமணம் செய்தான் முருகனையே வேண்டி
[நின்று
தொண்டனு மானுன் தூய்மை யடைந்திடவே
அன்று தொடக்கமாய் அக்கம்மா வெனவழைக்
[கும்
அப்பெண்ணு மிருப்பாளாம் பகல் முழுதும்
[கோவிலிலே
அப்பன் சரித்திரங்கள் அன்றுதொட்டு இன்று
[வரை
அத்தனையு மறிவாளாம் ஆனபெண் ணொருத்தி
[யவள்
இன்னுமொரு செய்தி இயம்புகிறேன் கேட்டிடுவீர்
குற்றவாளியாகக் கொலைக்குற்ற மொன்றினுக்கு
தூக்குத் தண்டனை விதித்து நாளுங் குறித்திடவே
குருமுருகன் கொடுத்த அற்புதப் பொருளதனுல்
அதிஷ்ட வசமாக அத்தண்டனையும் நீங்கியதாம்
உண்மையாய் நடந்த கதை ஊராரெல்லா
[மறிவார்

செல்லப்பிள்ளையார் உற்பத்தி

சிவத்தையு மாண்டு கொண்ட வடையாளமாகவே
[தான்
கோவிலொன்ற மைத்தார் கும்பிடுவதற் கென்றே
ஏனென்று கேட்பீரோ சொல்லி விளக்கிடவோ
புனிதனிவன் காண் வணக்கத்திற் குரியான்காண்
என்பதுவே பொருளாகும் கோவிலமை வதற்கு
உறவினு லென்னுெடு இரண்டறக் கலந்தவன்காண்
என்பதை விளக்குவதாம் சுவாமியின் ஊர்வலமும்
கதிர்காமத் தினங்களில்தான் கலந்துற வாடு
[வராம்
மேற் கூறியுள்ள காரணங்களுக் கிணங்க
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டறுபத்து
[நாலில்
மார்கழி மாதம் முதலாம் திகதியதில்
அச்சுவினி நட்ஷேத்திரம் கூடிய முகூர்த்தமதில்
செம்பொற் பாதங்கள் சிவந்திடவே நடந்து
செல்லப் பிள்ளையாரை ஸ்தாபிதம் செய்தார்காண்

தெய்வானையின் தோற்ற மறைவு

இவ்விதமா யோராண்டு ஓடி நடக்கையிலே
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டறுபத்
[தைந்தினிலே
புரட்டாதி மாதம் மூன்றும் திகதியன்று,
ஆதித்த வாரமதில் அடைந்தார் சிவகதியை
சிவகதி யடைந்த விதம் சிவமும் அறிந்தான்
[காண்
மரணப் படுக்கையிலே மாதா தெய்வானையைத்
[தான்

நெடுநாளாய் விட்டால் நெருப்பான முருகனுக்குச்,
சிரமமா மென்று சொல்லிச் சிரமமின்றி
[வெட்டுகிறேம்
என்று சிலபேர்கள் கத்திகொண்டு வெட்டுவதும்
கண்டானும் காட்சிதனில் காதலுட னோடிவந்து
முருகனிடம் சொல்லி முடிப்பதற் கிடையில்
மறைந்து விட்டாரென்று மக்களும் சொல்ல
[வந்தார்
மறுநாளவருடலை மக்களெல்லாம் சேர்ந்து
சிவமரியாதை யுடன் சிவபுராணம் பாடியேபோய்
அடக்கமும் செய்தார்கள் அன்னவரின் னுடலை
இனியிது யிவ்வாறு இவ்வளவோடு நிற்க
சிவமவனின் தாயவளின் செய்தியை யறிந்திடு
[வோம்
மகனைப் பிரிந்ததனல் மனம்மிக நொந்திருப்பாள்.

ஞானரம்மாவிடம் பூசாரியார் தேறுதல் கூறுகிறார்

என்ன புண்ணியந்தான் செய்தனையோ
[முற்பிறப்பில்
உந்தன் மகனைநீ பிள்ளையா யீன்றெடுக்க
எங்கள் குருமுருகன் ஒருவரையும் பொருட்
[படுத்தார்
உந்தன் மகனையோ உவந்திடுவார் வெகுவாய்
ஊரில் ஒரு பிள்ளையும் அவனுக்கு நிகரில்லையாம்
தேடக் கிடையாத திருவருளுக் குரியவனும்
காட்சியிலும் காட்டினதாம் குருமுருகன் தனக்கு
சிறு குழந்தையாகத் தன் மடியின் மீதிருக்க
ஞானக் குழந்தையாம், அவன் ஞான குருவான
[வர்க்கு

சித்திர மானவொரு புத்திரனுய் வந்தவனும்
சிறுபிள்ளே யாமிப்போ சிறந்து வளர்வானும்
ஊரும் சிறக்குமாம் உலகோரும் வாழ்த்துவராம்
மகன் புகழ் சிறிதாம் மாதாவின் புகழ்பெரிதாம்
கவலேயுனக் கினியேன் கவலேயின்றிச் சாப்பிடலாம்
துயரப்பட வேண்டாம் தூங்குவாய் சாந்தியுடன்
உடலுறுதி யோடிருந்து உன்மகனேப்
[பார்த்திடுவாய்
மகனுடைய சீர்சிறப்பை மனங்குளிரப் பார்ப்பாய்
[நீ
என்ற வகையாகப் பெற்றேரி ருவரையும்
தேறுதல் மிகக்கூறித் தேற்றினர வர்களேயும்.

பாதம் பதிந்த விதம்

தீர்த்தக் கெங்கை கட்டும் வேலே நடக்கையிலே
மடப்பள்ளி யருகே கொட்டிலொன் றமைத்தார்
[கள்
குருமுருக னங்கே செபத்தி லிருந்திடுவார்
சுத்தமுடன் கழுவுதற்கும் சுகமா யிருக்குமென்று
சாந்தினுல் நிலமமைத்தார் சாலச் சிறப்புடனே
நிலமும் அமைத்தபின்பு நின்றுமே பார்க்கையிலே
பாதம் பதிந்த விதம் பார்க்கத் தெரிந்ததுவே
அப்போது திருக்கூட்டம் அப்பன் முருகனிடம்
சுற்றிவரச் சூழ்ந்து சும்மா விருந்தார்காண்
எல்லோரும் கண்டார்கள் எழில்மிக்க பாதமதை
ஆட்கள் மிதியாமல் அணேயும் அமைத்திட்டார்
பூக்களு மிடுவார் புனிதமுடன் பாதமதில்
குருமுருகன் கருவிகளும் ஓய்வுற்றிருடுங்கும் வரை
தங்கியிருந்த விடம் பாதவரு கினிலாம்

சிவம் குரு முன்பாக மாற்றிப் பிறந்தமை

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டைம்பத்
[தைந்தினிலே
மார்கழி மாதம் மதிநிறைந்த நாளொன்றில்
குருமுருகன் சமாதிக் கோவிலமைந்த விடம்
வெளியா யிருக்கையிலே குருமுருகனு மிருந்தார்
[காண்
சிவமுமிருந் தான்காண் குருமுருகனுக் கெதிரில்
அப்போது சிவமவனுக் கதிகமாய்க் குத்தொன்று
வந்ததாம் வயிற்றினிலே யடக்கிடவும் மரிதாய்
குறித்த சில நேரமதால் குடலும் வெடித்ததுவாம்
மேனி முகமெல்லாம் ஓடிக் கறுத்ததுவாம்
சரீரமுங் குருமுன்பாய்ச் சரிந்து விழுந்ததுவாம்
உடலுணர்ச்சி சிறிது மில்லையாமப் போது
அடியார் கூட்டமெல்லாம் அரண்டுமே யோடின
[ராம்
குருமுருகன் மாத்திரமே அருகே யிருந்தாராம்
அருட் சிறப்பதனலே அவருமரு கிருந்து
அவ்வுடலுள் அவனுயிரை அழைத்திடவே வேணு
[மென்று
அயராத முயற்சிகள் அனேகமாய்ச் செய்தார்
[காண்
சிவம்! சிவம்! எனவழைத்தே சிவந்ததாம்
[திருவாயும்
முத்தி யடைந்திடவே முழுமூச்சாய் முயன்ற
[வலைச்
சிறுநிலைக் கிழுப்பதென்றுல் சாத்தியப் படுமாமோ
குருமுருகனும் தனது அபார சக்தியினுல்

இழுத்திட்டா ரவனுயிரை இரக்கமிக வுண்டாகி
காலை ஒன்பதரை மணிதொடக்கம் மாலைரெண்டு
[மணிவரையும்
இழுத்திடச்செய் முயற்சியெல்லாம் ஈட்டியதாம்
[வெற்றியினை
நாலரை மணிநேரம் நண்பகலெல்லாம் கழிந்தும்
அகலாம லவ்விடத்தே அருகிலி ருந்தாராம்
சிறிது நேரம் செல்லக் கண்கள் திறந்தனவாம்
சிறிது சிறிதாக உடலுணர்ச்சி பெற்றதுவாம்
சிவம்! என்றழைத்தவொலி காதில் விழுந்ததுவாம்
திருமுகம் நோக்கினனும் திருஷ்டியுட னேயவனும்
கண்டானும் திருக்கண்கள் கலங்கியிருப் பதனைக்
கலங்கினனு முள்ளமதில் கண்களில் நீர்மல்கிடவே
ஏன் அப்பனே? என்று வினவினனும் குருவை
என்ன தவறு செய்தேன் என்றுமே கேட்டானும்
எனது குறிக்கோளை யான் நிறைவேற்றுவதால்
தமக்குக் குறையுமுண்டோ தமியேனு லென்றனும்
திருக்கண்களிலே நீர் சொரியும் காரணம்
[தெரியாமல்
அதிசயித் திட்டானும் அகமுங் குழைந்திடவே
அப்போது குருமுருகன் திருவாய் மலர்ந்தாராம்
குறைத்தவத்தைப் பூர்த்தி செய்யக் குருவிடம்
[வந்தவன் நீ,
பூர்த்தியாகி விட்டதோ பூவுலகத் தோரறிய,
சித்தமல மறுவித்துச் சிவமாக்கவென்று வந்து
பழைய வினைகளெல்லாம் பாரம் கொடுத்தவன் நீ
இனிப் புசிப்பதெல்லாம் நான்தானே உனக்குக்
[கடன் இல்லையோ
சுமையிறக்கி விட்டதனால், சுமக்கவும் செய்வாயோ

நன்றியிது தானே, நம்பியுனை யேற்றதற்கு
நீ யீடேறும் மார்க்கமதைப் பார்த்திருப்போ
[ரெத்தனைபோர்
தொட்டவிடம் துலங்கும் வரை காத்திருப்போ
[ரெத்தனைபோர்
கோவிலுக்குக் காணியென்று வாக்குமிட்டா
[யெந்தனுக்கு
எழுத்து மூலமுமுண்டோ, இது ஏமாற்றும்
[வித்தையல்லோ
நல்ல காரியமோநீ செய்ததெல்லாம் போது
[மென்மூர்
உற்றூர் உறவினர்கள், ஊரவர்களெல் லோரும்
கேள்விகள் கேட்கவந்தால் பதில் என்ன
[சொல்லுவதோ
என்று பதிலளித்தாராம் திருக்கண்களில் நீர்
[மல்கிடவே
உரம் வாய்ந்த அவனுள்ளம் உடைந்துருகி
[ஓடியதாம்
மடமையை மிகவெண்ணி மயங்கி யழுதானும்
குறிப்பறிந்த குருநாதர் மெல்லவே யேகினர்காண்
வெடித்த குடலிலிருந்தரை மணி நேரமதால்
வியப்புறும் விதமாய் வாந்தி வெளியாகியதாம்
அள்ளிச் சுத்திசெய்வதற்கும் அங்கொருவ
[ரில்லையாம்
எங்கிருந்தோ வந்தாளாம் இளமையுள்ள
[கன்னியொன்று
பார்க்க மிகவழகியாம் பராசக்தி யாம்பெயரும்
அள்ளிச் சுத்திசெய்தாளாம் அன்புடனே
[அம்மாதும்

மலமுங் கழிவதற்கு வந்ததுவா மந்நேரம்
மார்க்கந் தெரியாமல் மயங்கி நிற்கும் வேளையிலே
நம்பின பேர்க்கு நடராசா என்பது போல்,
எங்கிருந்தோ வந்தாராம் நடராசா என்றொருவர்
கரத்தினில் பிடித்தனைத்துக் கடந்தனரா
[மெல்லையையும்
அடுத்த காணியதில் அக்கணமே கிடங்குவெட்டி
மலங்கழிக்க விட்டு, மூடிய பின் கூட்டிவந்து
கோவிலி லிருக்கவிட்டு அகன்றாரா மதன்பின்னே
ஏழை பங்காளன் இறைவனென்ற காரணத்தால்
அம்மையு மப்பனுமாய் ஆதரித்த விதமறிவீர்
கோவிலின் கண்ணே குடிகொண் டிருக்கின்ற
சகல தேவாதிகளின் சகாய மதனாலே
நோய்பிணிக் கிடமான நோயுடம்பு மாறுபட்டு
அருள் மேனிகொண்டு ஆகினன் சிவமெனவே
தோலிருக்கச் சுழை விழுங்கும் தொல்லோர்
[கதைபோல
தோற்றமதுவா யிருக்கத் துலங்கிடுவா னுள்
[ளொளியாய்
அறிவாரறி வரல்லால் மற்றவரு மறிவாரோ
வழிகண்டு துதித்திடவும் வேண்டுமே யவனருளும்;

நாகையரின் உயிர் மீட்டமை

தெய்வானை வயிற்றிற் பிறந்த மகனொருவன்
நாகையா வென்றே பெயரிட் டழைத்தனராம்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டறுபத்தைந்
[தினிலே
மார்கழி மாதம் இரவு மணி இரண்டளவில்

இயமன் வந்தாலும் எருமைக் கடாவொன் றினிலே
கையிலே பாசக் கயிறு மிருந்ததுவாம்
நாகையரி னுயிர்கவர நமனும் வந்திடவே
முருகனே நினைத்தாலும் முன்னின்று காத்திடவே
குருமுருக னப்போது குறுக்கிட்டு வந்தாராம்
கைகொண்டு காட்டினராம் காலனைப் போம்
[படியாய்

பின்வாங்கிச் சென்றுனும் பெரிதும் பணிவுடனே
கூற்றுவ னெடுத்துவந்த கோரவுரு வந்தனைப்
பார்த்தானும் நாகையா பதறியதா முடலதிகம்
குரலும் மிகவடைத்துத் தொண்டை மிகவரண்டு
சொல்லவும் முடியாமல் திண்டாடினன் மிகவாய்
குருமுருகன் முன்பாகக் கொண்டு வந்தாரவனை
திருநீறு மிட்டுத் தீர்த்தமும் பருகியபின்
விசாரித்திடச் சொன்னன் விபரமுடனே
[யெல்லாம்.

தொண்டர் திரு. C. நடராசாவின் வரலாறு

யாழ்ப்பாணத் திலுள்ள நல்ல சீமானொருவர்
நடராசா என்னும் நாம முடையவராம்
நல்லூர் கந்தனுக்கு நல்லதொண்டு செய்தவராம்
இருபத்தைந் தாண்டுகளாய் இவ்விதமே செய்து
[வந்தும்

வினைதீர வில்லையாம் விட்டுப்போனதாம் மனமும்
கந்தன் கருணை கிட்டிக் காலமும் வந்திடவே
வந்தாராம் நவாலிக்கு வழிவகை யெல்லாமறிந்து
கண்டாராம் குருவைக் கதைத்திட்டாரா மவரும்
முறையீடு செய்தாராம் முன்னிருந்த வியாதி
[யெல்லாம்,

அஞ்ச வேண்டாமென்று அபயமளித் தாரவரும்
விபூதியு மிட்டாராம் வினைகள் பறந்தோட
தீர்த்தமுங் கொடுத்தாராம் தீரா வினைதீர
நூலும் கொடுத்தாராம் நுண்ணறிவு தான்துலங்க
வீடும் சிறக்க விலையகற்ற வேணுமென்றே
காவலும் செய்வித்துக் காத்தாராம் மனையோரை
வந்த முதல்நாள் வைத்த பூசையமுதினிலே
சிறிதுண்ணக் கொடுத் தாராம் சீமானவர்களுக்கு
எத்தனையோ நாளாக அன்னவாகார மின்றி
அவலநிலைக் குள்ளாகி அவதிப்படு மன்னரை
சாதமுண்ணச் சொல்லச் சாகவோ என்றாராம்
சாதமென் றெண்ணுதே சாயுச்ய மருந்ததனை
உண்டுபார் கொஞ்சம் என்றாராம் குருமுருகன்
ஒருவாய் உண்டாராம் ஓடியதாம் பிணியுடனே
நன்றாக விருக்குதே நண்பகல் அன்னமதை
இங்கேயே முடித்திடலாம் என்றுமே எண்ணின
[ராம்
உடம்பில் அனேகம் உற்சாக மிருந்ததனால்
தொடர்ந்தாராம் மருந்தினுக்குத் தூரமென்று
[பாராமல்
பயணச் செலவும் போயின தாமதிகம்
அதிக சுகங் கண்டு அதிசயித் தாரவரும்
வந்தார் கோவிலுக்கு வழியடியானைத் தேடி
விசாரித்தார் சிவமவனை விசேஷ மெல்லா
[மறிந்தார்
குருமுருகனும் வந்தார் குமிண் சிரிப்புடனேதான்
தேடியலுத்துத் திரிந்தெங்குங் காணுமல்
முருகனில்லை யிக்காலம் என்றே முடிவுசெய்து
சாவதுதான் கண்ட பலன் சந்தேகமில்லையென்

இருந்த எனக்கும் இன்னருள் செய்தான்காண்
சாகுமுன்னரே யவனைக் கண்டேன் குருவடிவாய்
இனியென்ன தேவை யிதைவிட வேறெந்நனுக்கு
தூயவனே யுந்தன் தொண்டினுக் குரியாளாய்
பங்குகொள்ளும் பக்குவத்தைத் தந்திடுவா
[யெந்தனுக்கு
தொண்டுகள் அனேகமுண்டு துலங்கிடவே
[யிக்கோவில்
என்றுறுதி கூறி ஏகினர் விடை பெற்றே
நேர்மையுள்ள சீமானர் நேர்த்திசெய்த
[வண்ணமதாய்
மணிக்கூட்டுக் கோபுரமும் மற்றுமுள்ள
[தொண்டுகளும்
பாடுங் கருவிகளும், பதிவுசெய்த ரேப்புகளும்
விக்கிரகங்கள் சிலவும், வேண்டிய தளபாடங்களும்
வாத்தியக் கருவிகளும் வளமுடனே பூர்த்தி
[செய்தார்
கொட்டகையு மிட்டார், கோலமுடன் சாந்து
[மிட்டார்
தொண்டர் வரிசையிலே துலங்கினர் முதலாளாய்
குருவுடனு மன்பாய்க் கொண்டாடுவார் திறமாய்
நல்லபடி வாழ்ந்து வந்து வயோதி பராயிருந்து
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெண்பத்
[தாறினிலே
மாசி மாதமதில் மறைவெய்தினர் தோற்றம்
ஆவிபிரியு முன்பும் அடியார் சிவத்தையெண்ணிக்
கூவி யழைத்திடவே யேகினன் சிவமுமங்கே
நெற்றியிலே நீறுமிட்டான் தீர்த்தமுங்
[கொடுத்தான் கேட்க
அப்பனுனை யழைக்கின்றான் அஞ்சாமல் செல்
[என்றான்
மூன்றுவது நாளில் மூச்சுமடங் கியதாம்.

அர்ச்சகர் சுவாமி சண்முகம் அவர்களின் வரலாறு

பூர்வத்தில் செய்து கொண்ட புண்ணிய
[வசந்தாலே
என்ன தவம்செய்தாரோ யிப்பிறவி கிட்டுதற்கு
குருமுருக னவர்கள் அவதாரம் மாறுமுன்பு
துணைவனு யிருந்தாராம் தூயவரின் வாழ்க்கை
[யிலும்
அவதாரம் மாறியபின் தக்கதுணை யாயிருந்து
சிஷ்யரைப் போலே தொண்டு செய்து வந்தாராம்
நூலாராய்ச்சியும் நுணுக்கமாய்ச் செய்பவராம்
மந்திரங்கள் கூடக் கற்று மறந்தவராம்
பூமாலைகள் புனைந்திடுவார் பூக்கள் மிகப்பறித்தே
பூசைகளும் செய்து வந்தார் புனிதமுடனேதான்
விறகுகளும் சேர்ப்பார் வெய்யில் மழை பாராமல்
அன்பருக் குதவுவதில் ஆர்வ முள்ளாரதிகம்
திருவிழாக்கள் சோடினைகள் திறமுடனே
[செய்திடுவார்
செபங்கள் தவங்களெல்லாம் சிறப்புடனே
[செய்திடுவார்
நுட்பநெறியு மறிவார் நுணுக்க முடனேதான்
அமுது வகை செய்திடுவார் அதிக திறமையுடன்
கட்டிட வேலைகளு ங கனக்கவே தான்முடிப்பார்
கோயில் விருத்திகள் இங்குமட்டு மல்லாமல
செல்லப் பிள்ளையாரிடமும் செறிந்து இருந்தது
[வாம்
ஓலைகளும் விறகுகளும் ஒக்கபடி வந்திடுங்காண்
தேங்காய், இளநீர், திறமுடனே வந்திடுங்காண்
மாங்காய்ப் பழம் முதலாய் மற்றுமுள்ள
[நற்கனிகள்

வந்துமே சேர்ந்திடுங்காண் வகைவகை யாகவே
[தான்
திருநீறும் சுட்டுவைப்பார் தேவைக்கும் மிதமாக
கமக்காரரிடம் போய்க் கனக்கவே நெல்சேர்ப்பார்
காவல்களும் செய்வார் காசுகளும் சேர்த்திடுவார்
நூல்களும் கட்டுவார் நுணுக்க முடனேதான்
அன்பர்களே யெல்லாம் அன்புடனே யாதரிப்பார்
அடியார் சிவத்தையும் அழைத்து வந்தாராதி
[முதல்
அன்புடனே யாதரித்தார் அருமை யுடனேதான்
செல்லப் பிள்ளையார்க்கருகே சீவித்து வந்தவிரு
சிவத்தின் பெற்றோருடனே சேர்ந்துற வாடிடுவார்
கதிர்காமத் தினங்களிலே காவடிகள் ஆடிவரும்
காவடிக ளெல்லாம் கனக்கவே செய்துவைப்பார்
மேளமு மடிப்பார் மெய்மை யுடனேதான்
கலைக் காவடி யனேகம் கலைக்கொள்ளு மந்நாளில்
காவடிகள் மிகவுதிரும் கையுடனே செய்து
[வைப்பார்
அயரா மனமுமுண்டு அளவில்லா ஆற்றலுண்டு
திறமை யனேகமுண்டு தொண்டு செய்து
[வாழ்வதற்கு
தவமு முண்டவர்க்குத் தயவு தாட்சண்யமுண்டு
குழந்தை யுள்ளமுண்டு குறைவின்றி வாழ்ந்திடவே
சிறப்புகளும் கீர்த்தியும் சேர்ந்திருந்த தேயவரை
செல்லப் பிள்ளையாரைச் சீராயமைத்த தவரும்
கோயில மைத்தவரும் கொடியேற்றி வைத்தவரும்
ஆதிமுதல் பூசை செய்த பூசாரியுமவரே
செல்லத்தில் குடியிருந்த சிவத்தின் பெற்றோர்கள்
வயோதிப காலமெய்தி வயதுவந்து சாகும்வரை

உதவிகள் செய்து வந்தார் உண்மையுடனேதான்
தந்தை யாரிறந்தவுடன் இறுதிக் கிரியையெல்லாம்
இவரே நடப்பித்தார் இன்பமுடனே தான்
கோவிலுக் குகந்த விதம் குறையொன்றும்
[வாராமல்
அழுது புலம்பாமல் ஆசாரந் தப்பாமல்
சங்கு சேமக்கலம் சத்சங்கத்தோர் முழங்க
பாடுந் திறமையுளோர் பாடிக்கொண்டு
[சென்றிடவே
குதிரை வண்டியிலே கொண்டு சென்றுரவருடலே
தந்தையார் சரணமுத்தர் சாகுமுன்பு
[சொன்னவராம்
தகிக்காமல் தன்னுடலைத் தாட்டிடவே
[வேணுமென்று
அவ்விதம் செய்வதற்கு அதிகவெள்ள
[மிருந்தமையால்
எரித்தார் களவருடலே எரியவில்லே யாம்சிரசு
மறுநாள் கண்டெடுத்து மண்மேடு ஒன்றினிலே
அடக்கம் செய்தனராம் அவர் சொல்லியபடியே
இவ்வித மாயனேக தொண்டுகள் இயற்றியபின்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெழுபத்
[தொன்றினிலே
ஐப்பசி மாதம் ஆறும் திகதியதில்
சிவகதி அடைந்திட்டார் சிவனடி யாரவரும்
ஊரிலுள்ளோரெல்லாம் உயிர் மீண்டு வந்திருக்கச்
சாமியாருடலைச் சாகவிட்ட காரணமென்
என்றுமே கேட்பீரோ சொல்லுகிறேன்
[கேட்டிடுவீர்
பந்த பாசமென்ற பலமுள்ள கட்டதனை

முருகன றுத்ததனுல் முறைசொல்லி வாழாமல்
இறைவனே நம்பியே யிருந்தவோர் காரணத்தால்
பிள்ளைகளு மவரைப் பேணி நடக்கவில்லை
அதுவுமவர்க்கோர் ஆற்றவொண்ணுக் குறையாம்
அடுத்தது ஊரவர்கள், அன்னவரின் அக்கால
அருவருப்புக்குரிய, அகற்றிய அனுபவங்களெல்
[லாம்
பின்பும் அவர்முன்னுல், இருளர் உரைப்பதனே
நெஞ்சம் பொறுக்காமல் நேர்த்தி செய்தார்
[சாவதற்கு
சாகவரம் கேட்பார் பூசை முடிந்தவுடன்
கேட்டவரம் கொடுத்தார் கருணையுடனே முருகன்
வீங்கியது தேகம் வீணனது வாழ்க்கை
உயிர்பிரிய நேரிடவே இருமுறையாய்க் குருமுருகன்
தடுத்தாண் டாரவரைத் தரணியிலுள் ளோரறிய
பிடிவாதம் செய்து கெஞ்சிநின்றூர் குருவை
எந்தனுயிரை இழுத்திட வேண்டாம்நீ
இந்தவுடல் மாற்றியபின் இனிவருவேன்
[உன்னிடம் யான்
புதியவுடல் தாங்கிவந்து புரிந்திடுவேன் சேவை
[யெல்லாம்
என்னுயிரை விட்டுவிடு இழுக்காதேயென்று
[சொன்னுர்
என் செய்வார் குருமுருகன், இசைந்தாரவ
[ருரைக்கே.

பெயரில்லாத் தொண்டர் வரலாறு

தொண்டரொருவர் தம் பெயரைப் பிரசுரிக்க
விருப்ப மில்லாதவராய் வேண்டாமென
[வுரைத்தார்

அக்காரணத்தாலே அவரை அழைப்பதற்கு
காரணப் பெயரொன்றைச் சூட்டுவோ மவர்
[களுக்கும்
பொல்லாப் பில்லாமல் பெயரில்லாத் தொண்ட
[ரென்று
அழைத்திடுவோ மவரை அன்பு மிகவுடனே
கோவில் சரித்திரத்தில் ஆதிமுதல் காலமதில்
நிரந்தரமான தொண்டர் மூவரென வறிந்தோம்
அந்த மூவரிலொருவர் குருமுருகன் வாக்குப்படி
கல்யாணம் செய்திடுவார் கருத்தொருமித்த
[பெண்ணை
தொண்டர்கள் மூவருமே வாலிபக் காலமதில்
ஏகினரவரவராய் எண்ணமே யில்லாதபடி
இவ்விதமே யாண்டுசில வோடிமுடிந்த பின்பு
பெயரில்லாத் தொண்டர் முடித்தார் கல்யாணம்
குருவாக்குப் படியே அமைந்தாளாம் பெண்
[ணவளும்
பெண்பிள்ளை களுமிருவர் பிறந்தாரவர்களுக்கு
நோய்வாய்ப்பட்டு நொந்து மிக வாடி
முருகனிடம் தேடி வந்தார்கள் மறுபடியும்
கருணையுள்ள கந்தன் காத்திடவே வேண்டி
எரித்தாரவர்கள் வினை காய்ச்சல் சுரம்கொடுத்து
கழித்தாரவர்கள் வினை வயிற்றோட்ட மதனாலே
உடற்சுத்தி பெற்றார்கள் உட்தொண்ட ராஞர்கள்
ஆசாரத்துடனே யவன் பணிகள் செய்வார்கள்
வினைகளகன்ற பின்னர் வீடுமொன்ற மைத்தார்
[கள்
கந்தனவனே யெண்ணிக் கந்தபுர மெனவழைப்
[பார்

குருமுருகனிரு முறையாய்ச் சென்றுரா
[மவ்விடத்தே
வீட்டை வலஞ்செய்தாராம் விசேயொன்று
[மணுகாமல்
படமொன்றுங் கொடுத்தாராம் பக்தியுடன் பூசிக்க
முருகன் துணையாக முன்னின்று காத்திடவே
சீர்சிறப்பு களெல்லாம் சேர்ந்தனவே யவர்க்கு
ஆண்மக வில்லையென்ற அவாவுட னிருந்தமையால்
ஆண்மகவு மொன்றை அளித்தா ரவர்களுக்கு
குறைவின் றியெமக்கெல்லாம் கொடுத்த குருபரனே
மறவாமை வேண்டுமென வேத்திடுவார் தினமும்
தொண்டு செய்வார் தொடர்ந்து தூயவனின்
[கோவிலுக்கு
பாடிப் பணிவார்கள் பஜனையும் செய்வார்கள்.

தொண்டர் ச. கந்தசாமியின் வரலாறு

அக்கம்மா வுடைய அந்நாட் கணவரவர்
கந்தசாமி என்பார் கனதொண்டு செய்துவந்தார்
பின்னே மணஞ்செய்து பிள்ளைகளு முண்டவர்க்கு
முருகனே முன்னிட்டே வாழ்ந்து வந்தாரவரும்
குறையதிக மின்றிக் குதூகலமாய் வாழ்ந்து
[வந்தார்
யாழ்ப்பாண நகரில்தான் நன்கு குடியிருந்தார்
சிறுமைப் பட்டகாலம் சிறிமாவோ ஆட்சியினால்
கஷ்ட முற்றுரதிகம் கடன்கள் மிகவாகி
சமாளித்திடச் செலவைச் சரக்குக் கடையொன்
[றைத்
திறந்தாரா மன்னுர் திறமையுடனே தான்
ஊணுறக்கமில்லை ஓய்வும் மிகக் குறைவு

சாப்பிடவும் நேரமில்லைச் சாகும் காலமும்
[நெருங்க
தொண்டுகள் விட்டார் கட்டுண்டார் கடையுடனே
வெறுங் கர்மியானார் வேலவனே யெண்ணுமல்
நோய்வாய்ப் பட்டதுடல் நொந்தார் மனமதிகம்
காசுகளும் செலவாகிக் கலைத்துவிட்டார் மெத்த
வந்தார் முருகனிடம் வழிவகையுடனே தான்
தங்கியிருந்து தக்கபடி சிகிச்சை பெற
இடமில்லைக் கோவிலிலே யென்றுமே வீடுசென்றார்
அவரொருவரே யறிவார் அருள்மருந்தி
[னவசியத்தை
மற்று மனையோரறியார் மருந்தின் மகத்துவத்தை
நோயு மதிகரித்து மயக்கமு முண்டாச்சு
கோவிலுக்குக் கொண்டுவர நோயாளி
[சொன்னராம்
மனையோர்கள் மறுத்திட்டார் மந்தமுடனே தான்
ஆவி பிரிவதற்கு அவகாசம் சற்றிருக்க
கொண்டுவந்தார் கோவிலுக்குக் குருமுருகன்
[முன்பாக
விபூதியுமிட்டார் தீர்த்தமும் மிகக் கொடுத்தார்
நீறுமிட்டார் நோயாளி, கையும் தொழுதிட்டார்
முருகா வென்றலறினர், ஏகினர் விடைபெற்றே
வீடு சென்றபின், விட்டகன்ற தாவியுமே
இவர் சிவகதியடைந்த, சிறப்பதனை யுன்னிடில்
[நாம்
பட்டினத்தார் கேட்டவரம் பலித்தது
[காணிவருக்கும்,

தொண்டர் மா. கந்தசாமி அவர்களது வரலாறு

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெழுபத்
[தெட்டினிலே
கந்தசாமியென்ற தொண்டர் காலமாகிய பின்னர்
புதியவோர் கந்தசாமி புரியவந்தார் சேவையினை
அறிவுண்டு, ஆற்றலுண்டு, அதிகதிறமை யுண்டு
பக்தியு முண்டவர்க்குப் பணிபுரிந்து மகிழ்வதற்கு
குருவின் மேலிச்சையுண்டு குறைவில்லா
[வாழ்வுமுண்டு
புதுவருடத் தினங்களிலே புத்தாடை யணிவிப்பார்
குருமூர்த்தி யுடனும் கொண்டாடுவார் மிகவாய்
தீர்த்தக் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு
அடியார் கூட்டம் அதிக சிரமப்படவே
குழாய் நீர்வசதிசெய்யக் கூலியும் கொடுத்தார்
[காண்
பக்தகோடிகள் வணங்கப் பரந்தகொட்டகை
[யமைத்தார்
செல்லப் பிள்ளையார் கோவில் சீருடனமைவதற்கு,
மடக்காணி வாங்குதற்கும் அதிக முயற்சி
[செய்தார்
பத்தாயிரம் ரூபா பதிபுண்யமாய்க் கொடுத்தார்
குருமுருகனுருக்குச் சமாதி நெருங்கையிலும்
வந்து பணிந்துநின்றார், வாக்குடனே ஆசி
[பெற்றார்.

சிவம் அடியார்க்கு நடந்த சத்திய சோதனைகள்

மகத்தான சாதனைக்கு மனமாரத் துணிந்தவனை
சோதிக்க வெண்ணினார் சோதிப் பெருமானும்
குருவேடந் தாங்கிவந்து குவலயத் தோரறிய

கேள்விகள் கேட்டாராம் கேட்பீரோ என்ன
[வென்று
பந்தபாசமென்ற பொல்லாப் பற்றுமுண்டோ
[வென்றறிய
உந்தன்தாய், தந்தையர், உடன்பிறந்தா
[ரவர்களது
சிரங்களைக் கொய்து கொண்டுசீக்கிரம் வருவாயா?
எந்தன் முன்னிலையில் எல்லாம் உருட்டுவையோ?
என்றுமே கேட்டார், எழுந்தான் சிவமவனும்
அப்பன் சொல்லுக்கு அச்சமில்லை யென்றுளும்
துணிந்தானுந் தலைகொய்யத் துயரமில்லாதவனுய்
குறிப்பை யறிந்தாராம் குருமுருகன் தானும்
தடுத்தாரா மவனைத் தக்கவுபசாரஞ் சொல்லி
எவ்வாறே வென்று இயல்புடனே கேட்பீரோ
சொல்கிறேன் கேளீர் சொன்னபடியே தான்
தற்போதுனக்குள்ள தகுதிமிக்க நிலைமையிலே
சொன்னதைச் செய்வாய் துணிவுடனே
[யானறிவேன்
அச்சமென்பதறியா வரக்கனுளங் கொண்டவன் நீ
என்றவிதமாக இதமான வார்த்தை சொல்லித்
திருப்பிரைவன் மனதைத் தேற்றமுடனே தான்
பின்னும் கேட்டாராம் பிறிதுமோர்
[கேள்வியொன்று
கடவுளைக் காணக் கனவிச்சை கொண்டவன் நீ
என்னை மணம் முடிக்க இயலுமோ வுந்தனுக்கு
பிள்ளைகளு மெத்தனையோ வுழைப்பாயோ
[வத்தனைக்கும்
என்றுமே கேட்டாராம் இயல்புடனே சிவமவனை
அன்னவரின் கேள்விக்கு ஆம் அப்பனேயென்று

சிந்திப்பேது மின்றிச் சிவமவனும் சொல்லி
[விட்டான்
மெச்சினர் தைரியத்தை மேலும் கேட்கத்
[துணிந்தார்
அவனுடைய வன்புளத்தை யளவிட் டறிவதற்கு
கேட்டாரா மவனைக் கிலேசமுள்ள கேள்வியொன்று
இரத்தினக்கல் ஒளிவீசும் இதழ்களுள்ள
[சங்கிலியைத்
தங்கத்தால் செய்து தருவாயோ வெந்தனுக்கு
என்பதாமவர் கேள்வி யென்ன செய்வான் சிவமும்
உள்ளத் துறவுடையோன் உவப்பானே சங்கிலியை
ஆர்வீகம் சற்றுமின்றி அலட்சிய முடையவனுய்
நிறைவேற்றும் நிலையில் நானில்லை யென்றுனும்
தோற்றனையிக் கேள்வியிலே யென்றுராம் குருவும்
விளக்கமுஞ் சொன்னுராம் விவேக முடனேதான்
மனமுண்டே லிடமுண்டு மதிகெட்டவனே கேள்
தளர்வறியா மனமன்றே தருவிப்பது வெதையும்
மனக்கோண லுதவுமோ மகத்தான சாதனைக்கு
என்றுமே கேட்டாராம் இதமான வார்த்தையினல்
மேன்மேலு மவனைச் சோதித்திட வெண்ணி
சத்திய சோதனைக்குச் சகிப்பு முண்டோ
[வென்றறிய
அபாண்டமாய் கொடுஞ் சொற்கள் கூறினரா
[மவன்மேல்
தன்னுண்மை புரியவைக்கத் தயவுடனே வேண்டி
[நின்றும்
தோல்வியே கண்டான் துணிந்தான் தலைமோத
குறிப்பறிந்தார் குருவும் குணமுடனே கரம்பற்றி
சோதனை களில்லாத சுகமான பாதையென்றே

இலட்சியப் பாதையிலே இறங்கினுய் துணிந்து
புரிந்ததேயுன் சாமர்த்தியம் போய்ப்பார்
[வேறிடத்தை
என்றுமே கூறியபின் எழுந்துமே சென்ருராம்
வெட்கித் தலைகுனிந்து வேதனை மிகவுடனே
கெஞ்சி நின்ருன் குருவைக் கிருபை பெறுவதற்கு
முதல் முறையாக மன்னிக்க வேண்டுமென்ருன்
இரங்கினர் குருவும் இவன்மேல் கருணைகொண்டு
காரண மதையும் கரவாமல் சொல்லுகிறேன்
உச்சிவெய்யில் நேரம் உயர்ந்த மண்புட்டிகளில்
சிவம் விறகு சேகரித்துக் கொண்டுவந்தான்
[கோவிலுக்கு
உடல் இளைப்புற்ருலும் உண்பதில்லை வேறிடத்தில்
தாகமுந் தணிப்பதில்லைத் தலத்திலல்லா
[வேறிடத்தில்
காலையுண வுண்பதில்லைக் கனத்த பசிவந்தாலும்
குறைபா டெதையுமவன் கூறமாட்டான் வெளியில்
இவன் குணங்களையெண்ணி இரங்கினர் குருவும்
பஞ்சாமிர்தம் அமுது பரிவுடனே கொடுத்தார்
அன்னவாகார மெல்லாம் அன்புடனே தான்
[கொடுத்தார்
வேறுமொருநாள் மேலும் சோதனை செய்ய
[வெண்ணி
கத்தியுமொன்று கையில் கொண்டுசென்ருர்
[குருமுருகன்
உடற்பந்த முண்டோ வென்றுள்ளபடி யறிவதற்கு
வலியக் கதைகொடுத்து வார்த்தையு மாடியபின்
கத்தியினு லரிந்தார் காலிலே யிரத்தம்வர
சிவமவனு மப்போது சீற்றமெதுவு மின்றி

மரம்போல் நின்றுனும் இரத்தமும் ஓடியதாம்
என்றே வுனக்கென்றே ஒதுக்கிவைத்த யிவ்வுடலை
நீஎன் செய்யினு மெனக்கென்ன, என்றுனுமவனும்
பச்சைநிற மருந்தொன்றைப் போட்டாராம்
[காயமதில்
ஒருநாட் பொழுதிட்ட ஒப்பற்ற மருந்துடனே
மாறிவிட்டதாம் காயம் மாயவித்தையது போலே
பெற்றோர் மேல்பாசம் பின்னுமுண்டோ
[வென்றறிய
தந்தையார் சரணமுத்தர் தான்படுத்த கட்டிலினுல்
தவறி விழுந்தாராம் கால் நொண்டியாகியதாம்
சிகிச்சை சாலைக்குச் சென்றுவர வேணுமென்று
தாயாரும் வைதாள், தயவாகவும் கேட்டாள்
ஊரவரும் வைதார்கள் ஒத்த படியேதான்
அவன் மனமசையவில்லை அப்பனுக்கே விற்ற
[மையால்
போவது மில்லையவன் பெற்றவள்தான்
[நொந்தாலும்
குறிப்பறிந்து குருமுருகன் கட்டளை
[யிட்டாலொளிய
செல்ல மாட்டான் சிவமும் செல்லமிருக்குமிடம்
வயோதிபர் களிருவரும் வசித்துவந்த நாட்களிலே
தேவைப் பொருட்களெல்லாம் திருப்திவர
[அனுப்பிவைப்பார்
தந்தையார் சரணமுத்தர் தானிறந்த வேளை
[யிலும்
போகவில்லை யாமவனும் பொறுப்பை மனதி
[லெண்ணி
மார்கழித் திருநாள் மகத்தான தொண்டுகளை

மனமாரச் செய்துவந்தான் மாண்பு மிகவுடனே
தந்தையார் மறைந்தபின்பு தாயாரும் தொண்டு
[செய்து
சலித்தாளுடம் பதனுல் சாகுமுன்பு சொல்லிடு
[வாள்
நேர்முகமாய்ச் சந்திப்பாள் நிமிர்ந்துமே
[பேசிடுவாள்
சேயின்கட னன்னேதொண்டு, சேய்நீ அறியாயோ
தாயைவிடச் சிறந்த, கோவிலு மெங்குமுண்டோ
பெற்றவள் மனம்நொந்தால் பிள்ளேதனேத்
[தோங்குவனே
என்றவிதமாக இடுவாள் தர்க்கம் நேரில்
குருவிடமும் நேரில் குறைகள் சொல்லியழுவாள்
பார்க்கத்தான் சகிக்குமோ பாவியவ னுள்ளமது
தாயார் மறையு முன்பும் தந்தியொன்று
[வந்ததுவாம்
மறைந்த பின்னர் தந்தியிரண்டு வந்தனவாம்
எதிர்பார்த் திருக்கின்ருேம் வரவையல்லால் பதிலே
என்றவாறி ருந்தனவாம் இருதந்தியிலும் வசனம்
பதில் கொடுப்பது யார், சிவம் பாராமுகமாயிருந்
[தால்
வழிபார்த்த லுத்தார்கள் மார்க்கம் தெரியாமல்
இறைவனுக்கே யாட்பட்டால் இல்லேயே
[நிபந்தனைகள்
தன்னேமறந் திருப்பவனேத் தரணியோ
[ரென்செயலாம்.

அன்பினுலிரண்டறக் கலந்த குருவும், சிஷ்யனும்

சகல தீட்ஷையுமறிந்த சாமியார் சண்முகமும்
கண்ணேட்ட முடனிருந்தார் கவனமுடனே தான்

காரணம் தெரியுமோ கரவாமல் சொல்லிடவோ
முப்பத்தொரு வயதினிளுன் முற்சென்மத்
[தொடர்பதனல்
வந்துமிருப்பானே வாழ்க்கை முறையுடனே
என்ன இரகஸ்யமோ என்று பார்ப்போமிருந்து
என்பதுதான் அவருளத்தே யிருந்தவோர்
[கூற்றதுவாம்
ஏனென்று கேட்பீரோ இன்னமுஞ் சொல்லிடவோ
குருபக்தி மேலீட்டால் பித்துப் பிடித்தவன்போல்
நிழல்போல் தொடர்வான் இணைபிரியாமல்
[குருவை
கோவிலுக் குள்ளே குருசெப மிருக்கையிலே
எதிரிலிருப்பான் சிவமும் எண்ணமெது மில்லாமல்
குருவினுருமீது கொண்டிருந்த பக்தியினுல்
காட்சிகளு மனேகம் கண்டு களிப்பானும்
விதம் விதமாகவே வெவ்வேறு தோற்றங்கள்
காட்சி யளிப்பதனைக் காண்பானு மவனும்
கதிரொளியைக் கண்டு கண்ணீர் விடுவானும்
ஆறுமுகம் தோற்றியதாம் அகோர முடனேதான்
சிவன் தோற்றங்கண்டு சிலிர்த்ததா முடலும்
ஆறுமுகக் கடவுள் அவனுடைய முகம்நோக்கி
என்னவரம் வேணுமென்று இயல்புடனே
[கேட்டாராம்
உன்னைப் பிரியாது உனதருகே யிருந்து
தொண்டு செய்துனக்குத் தூய்மைபெற
[வேணுமென்று
பிரியாவரம் கேட்டுப் பெற்றுக் கொண்டானவனும்
ஆறுமுகத்தோனே அவதாரஞ் செய்து வந்து
ஆண்டு கொண்டானவனை அறிந்திடுவீ
[ரெல்லோரும்

இவ்வாறிருக்கச் சாமியார் சண்முகமும்
செபத்தி லிருப்பாராம் சிவத்தை யாராய்ந்தறிய
செபமிருந் தறிந்தவற்றைச் சிவமுடனுஞ்
[சொன்னராம்
குருவுடனுஞ் சொன்னராம் தான்கொண்டிருந்த
[கூற்றினையும்
ஒளியாமல் சொன்னராம் உள்ளபடி யெல்லாம்
எவ்வாறென்பதையு முரைக்கின்றேன் கேட்டிடுவீர்
முற்றுந் துறந்த முனிவனுகச் சிவத்தைத்
தனித்தே யிருப்பதையும் தான்தானுய்
[நிற்பதையும்
கண்டவித முரைத்தாராம் கரவும் நீங்கியதாம்
வேறுமோர் காட்சியுங் காட்டிய தாமவர்க்கு
நெருப்புக் குச்சுப்போல் நீண்டவுருக்
[கொண்டொருவன்
குருவின் முன்பாகக் குணமுடனே யிருந்து
பாத்திர மொன்றிலுள்ள பதார்த்தமதைத் தொட்டு
தனதங்க மெல்லாந் தொடவே துலங்கியதாம்மேனி
பூரிப்படைந்து புதுப்பொலிவுள்ள தோற்றமுடன்
குருவினுருப் போன்றே குறைவின்றி வளர்ந்தது
[வாம்
அதிசயச் செய்தியினை அறிவிக்க ஆர்வமுடன்
துடித்தாரா முள்ளமதில் திறந்தனவாம்
[கண்களுமே
குருமுருகன் முன்பாகக் கூறினர் கண்டவற்றை
குறித்தது சிவத்தையென்று கூறினராம் குருவும்
சந்தேகம் நீங்கினராம் சாமியார் சண்முகமும்
அன்பதிக முண்டாச்சாம் அடியார்சிவம் மேலே
அடியார் கூட்டத்தின் அதிபதி யிவரெனவே

ஏட்டிலு மெழுதினராம் இவர் மேலானவரென்று
அடியார் கூட்டத்துள் அத்தனை பேர்களுக்கும்
அவசியத் தேவையெல்லாம் அவர்பூர்த்தி
[செய்திடவும்
பூசாரியார்க்குரிய பூசைப் பொருட்கள் முதல்
அறிவித்தல் செய்வதற்கும் அவரே பொறுப்
[பென்று
அடியார் கூட்டத் தாரம்மட்டோ டல்லாமல்
மற்றோர்களும் முறையை ஆமோதித்து நடத்தல்
நீதியாம் அன்றேல் நெறிபிசகாம் என்றுசொல்லி
எழுதிவைத்த ஏடும் இன்று மிருக்கிறதாம்
அறிவுடைய வடியவரா யன்னிருந் தமையால்
அடக்க மனேகம் அமைந்திருந்த தந்நாளில்
குருவும் சிஷ்யனுமாய் கோவிலுள்ளே யிருந்து
அருளே ஆள்வதற்கு அதிக முயற்சிசெய்வார்
குருவின் திருவாயால் மலர்ந்திடுமாம் மந்திரங்கள்
தீர்க்க தர்சனங்களும் திறமுடனே யெழுதி
[வைப்பார்
அருள் வாக்குகளுமனேகம் அந்நாளி லெழுதி
[வைத்தார்
இயந்திரங்க ளெத்தனையோ வெழுதிப் பதித்த
[துண்டு
வெளிவந்த வருட்பாக்கள் எண்ணிலடங் காவாம்
ரேப்பில் பதித்திடவும் திருவருளில்லை யப்போ
வேகம் கெடுத்தாண்ட வெற்றனும் சிவமவனும்
வேகமுடன் எழுதிவைக்க விவேக மில்லாதவனுய்
விடப்பட்ட பாடல்கள் வீணுக வெத்தனையோ
காற்றோடு காற்றுகக் கலந்தனவா மந்நாளில்
தீரன் முருகனது தீர்க்க தர்சனங்களெல்லாம்

ஏட்டி லெழுதிய வாறெல்லாம் நடந்தனவாம்
கல்யாணம் நடந்ததாம் கனபேர்கள் முன்பாக
யாஅனவாகன மொன்றும் வருவிக்கப் பட்டதுவாம்
பழனியென்ற பாலிக்குப் பனித்தசடை
[போட்டதுவாம்
கல்வீட்டிலறை யொன்றும் கனமுடனே
[கிடைத்ததுவாம்
திருந்தாத பேர்கள் திருந்தவில்லை யாமுரைபோல்
செல்லப் பிள்ளையாரிடம் சுவாமி செல்லுமூர்
[வலமும்
உரையி லிருந்ததாம் உள்ள படியேதான்
தங்கவேல் வருமென்று தகுதியுடன் சொல்லி
[வைத்தார்
திருவிழாவின் போது சுவாமிகொண்டு
[செல்வதற்கு
கொட்டகை கழற்றுவதும் குறித்திருந்த
[தாமுரையில்
ஒருவன் வருவனென்று குறித்திருந்ததா முரையில்
பெண்கொள்ள வந்தவனும் பரஞ்சோதி
[என்பானும்
பாதம் பதிந்திருந்த கொட்டில் எடுபடுமென்று
உரைத்திருந்த படியே எடுபட்டதா மதுவும்
வயிரவரிருந்தவிடம் விட்டுமே யகன்று சற்றே
தூரப் போவாரென் றுரைத்திருந்தாரா முரையில்
பவுண் சங்கிலியொன்றும் பழனிக்கு வந்ததுவாம்
மயிலும் வருமென்று வுரையிலிருந் ததுவாம்
வேறுமொரு ஆள்மீது அம்மன் வருமென்று
தெய்வானை மறைந்த பின்புதிற முடனுரைத்திருந்
[தார்

திருவிழாக் காலத்தில் தெருவீதி வழியாக
சுவாமிவலம் வருமென்று சொல்லியிருந் தாருரை
[யில்
பாஷைகளு மெத்தஜனமோ வந்தனவாந்
[திருவாயால்
அடியார் தொண்டர்க்கும் அன்பர் அனேகருக்கும்
உரைத்திருந்த தெல்லாம் உள்ளபடி நடந்தனவாம்
முன்னெச்சரிக்கை யுடனும் மொழிந்ததுண்டா
[முரையில்
சற்குருவைத் தேடிவரும் சற்புத்திர னொருவன்
பக்குவ மடைவதற்குப் போதிய காலவரை
பன்னிரெண்டு ஆண்டென்று பலபேர்கள்
[சொன்னதுண்டு
சற்குருவைத் தேடிவந்த சற்புத்திரன் சிவமும்
பன்னிரெண்டு ஆண்டு சென்றும் பிரிய
[மனமில்லாமல்
பிரியவரம் பெற்றுப் பிரியமுடனிருந்த மையால்
அந்தரங்க சிஷ்யனும் அமர்த்திஞர் குருமுருகன்
ஒன்றுக்கு இரண்டு ஒப்பற்ற கோவில்கள்
நடமாடுங் கோவில்களாய் நவாலியி லிருந்ததனால்
அள்ளிச் சொரிந்ததருள் அளவில்லா மலேதான்
கதிர்காம முறைபதியால் கனக்கவேயூர் செழித்துச்
செல்லக் கோவில் வரையும் செறிந்ததாம்
[செழிப்பெல்லாம்
குனியாத வீடுமெத்தக் குறைவில்லா வளங்களுடன்
மின்சார வொளியுடனே மின்வசதிகள் பொருத்தி
சிறப்பாகக் காட்சிதரும் தெருவோர மிருமருங்கும்
சாதுக்கள் சிலரும் சிவவேடம் பூண்டுவந்து
உண்மையினை உரைத்ததுண்டு உள்ளபடியே தான்

பொங்கும் காலமது, பொலிவுமிக வுண்டாச்சு
கொட்டகைகள் கோவில்கள் குறைவின்றி
[யமைந்தனவாம்
திருவிழாக்க ளெல்லாம் திறமுடனே நடந்தனவாம்
அருள் மிக்கக் காவடிகள் அனேகமா மந்நாளில்
கலிகொண்டு ஆடிடுமாம் கனவாச்சர்ய மதாய்
குருவுஞ் சிஷ்யனுமாய்க் கூடவே நிற்கையிலே
பொறுப்புடையோன் பாதம் பணிவதுண்டாம்
[தேவதைகள்
இருவருடனும் உறவு கலப்ப துண்டாம்
சிஷ்யன் சிவமென்ற சீரும் விளங்கியதால்
சொல்லிக் கொடுப்பதுண்டாம் திருத்தமுடன்
[பாங்குமுறை
ஒளிச்சிறப்புடைய உண்மை மிக்கத் தேவதைகள்
கௌரவிப்ப துண்டாம் கனமரியாதை யுடன்
குருவும் சிஷ்யனும் குதூகலமா யிருந்துவந்தார்
அக்கம்மா என்றவளும் ஆவேசம் கொண்டவளாய்
அரோகரா‌ச் சொல்வாளாம் ஆர்ப்பரிப்பாளாம்
[மெத்த
அவளு மறிவாளாம் அந்நாள் நடந்ததெல்லாம்
கனவிலும் கண்டவளாம் சிவமுடைய தத்துவத்தை
குருமுருகனுடனே கூடவே கட்டிலின் மேல்
சரிநிகர் சமானமுடன் சப்பாணி யிட்டிருக்க
முன்னொரு போதும் கண்டிலளா மவனுருவை
அவனுடைய வடையாளம் அப்படியே
[சொன்னாளாம்
கண்பார்வை யிழந்தவள் கண்டவித முரைத்தாள்
பழனியென்ற பாலிக்கும் பால்ய வயதினிலே
காட்டியதாம் கனவில் கருத்துடனே சிவத்தை

கொழுக்கித்தடி யேந்திக் கோலமுடன் நிற்பதனை
கனவின் பொருள்தனையும் கரவாமல் சொல்லு
[கிறேன்
எட்டாத நிலைகளையும் எட்டும் தகுதியுள்ளான்
என்பதுவே பொருளென்று எடுத்துரைத்தார்
[குருவும்
சிவமும் காண்பதுண்டாம் கொழுக்கியுடன்
[தன்னுருவைத்
தோற்ற மதிலும் அதியுயர்ந்ததா முருவம்
புண்ணியாத்மா வொன்று பிறந்துவந்ததாம்
[கிளியாய்
பெட்டியென் றழைப்பாராம் பிரியமுடனே
[முருகன்
திருவிழாவில் முருகன் திருவுஞ்ச லாடுகையில்
தோள்மீ திருக்குமாம் திறமுடனே யக்கிளியும்
மடிமீ திருக்குமாம் மஞ்சன நீராடுகையில்
வேறு மயில்களும் வந்தனவாம் மனதையுங்
[கவர்ந்தனவாம்
புண்ணியங்கள் பூத்துப் பொலிவுடனிருந்தமையால்
மூவுலகத் தோரும் முருகனைத் தரிசித்து
வேண்டும் வரங்களெல்லாம் வேண்டினு
[ரதிகமதாய்
நாட்டின் பலபாகங்களால் நல்ல பலனுடையோர்
வந்து சேர்ந்தார்கள் வழிவகை யெல்லாமறிந்து
அவர் திருவருட் பேற்றுல் பெற்றூர்களுய்வதிகம்
வருமான மென்பதில்லா வளங்குறைந்த
[கோவிலுக்கு
திருவிழாக்கள் பூசைகள் திறமுடனே செய்து
[வந்தார்

அர்ச்சகர் குடும்பம்முதல் அடியார் கூட்டத்திற்கும்
தொண்டுகள் செய்பவர்க்கும் தேவைகளைப்பூர்த்தி
[செய்தார்
இல்லை யென்னுத ஈகையும் நடத்திவந்தார்
உயிரிழக்க நேர்ந்த எத்தனையோ பேர்களுக்கு
உயிர் மீட்டுக் கொடுத்தார் உள்ளபடியேதான்
தாலிப் பிச்சை கேட்டவர்க்குத் தாலிப்பிச்சை
[யளித்தார்
ஆயுள் குன்றினோர்க்கு ஆயுள்மிகக் கொடுத்தார்
பில்லி, சூனியம், பகை, பெருமளவில்
[நீக்கிவைத்தார்
சாப்பிட முடியாமல் சாகவிருந்தோர் பலரைச்
சாப்பிடச் செய்தார் சாலச் சிறப்புடனே
மக்கட் பேறில்லாமல் மனம் வருந்தி வந்தோர்க்கு
மக்கட் பேறும் கொடுத்து மகிழ்வுடனே
[வாழவைத்தார்
அங்கவீனஞ் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கிய
[பின்
அவ்வண்ணம் செய்யாதே யகற்றினோர் நோயதனை
கண், விதை, குடல், தொண்டை கனத்த
[விடங்களிலே
சத்திர சிகிச்சை செய்யச் சகிக்க மனமில்லாமல்
சாதாரண சிகிச்சையுடன் சரிவரவே செய்தாராம்
வறுமைப் பிணியதனால் வாடிய பலபேர்க்கு
சீரும் செல்வமும் சிறப்புடனே வழங்கினராம்
உத்தியோகம் உயர்பதவி கல்வி கீர்த்தியுடன்
கல்யாணம் செய்து களிப்புடனே வாழ்ந்திடவும்
இஷ்ட சித்திகள் பெற்று இனிமையுடன்
[வாழ்ந்திடவும்

வேண்டியவர் வேண்டிய வாறெல்லாம்
[கொடுத்தாராம்
தீவினைப்பயனுக வந்த தீராத வினைகளெல்லாம்
தீர்த்து வைத்தாராம் திறமையுடனே தான்
விஷம் தீண்டிய வொருவர் வைத்திய மேதுமின் றி
தீர்த்தமதில் தயாரித்த தேனீர்ப் பானமதை
முருகன் கையால் வாங்கி முறையுடனே பருகிய
[பின்
விடமெல்லாம் போக்கடித்தார் விவேக
[முடனேதான்
வைத்திய மேதுமின்றி வைத்த பூசையமுதுடனே
தீராதவினை, நோய்கள் தீர்த்தவர்கள் எண்ணில
[ராம்
மகிமை எங்குண்டோ வெதிர்ப்பு முண்டாமவ்
[விடத்தே
கதிர்காமத்தையனிங்கு காவலுடனுறைந்த விதம்
பெருமைப் பட்டோரை விடப்பொருமைப்
[பட்டோரனேகர்
எதிர்ப்பின் காரணமாய் எல்லாவித சேஷ்டைகளும்
செய்துமே யலுத்தார் சேவலுடன் மயிலிருக்க
தீவினை விதைத்தவர்கள் தீவினை யறுத்தார்கள்
அனியாயம் செய்தவர்கள் அவல நிலைக்காளானார்
தேவாலயத்தின் பின்புறத்தில் தீவினைத்
[தகடுவைத்த
பெண்ணொருவர் பட்ட பாட்டினையும் கேட்டிடுவீர்
கண்பார்வை யிழந்தாள் கனக்கவே துன்புற்றாள்
கணவரறிந்திருந்தார் காரணமதை யெல்லாம்
குருவுடன் கூட்டுறவு கொண்டவராம் கணவர்
மனைவி படும்பாட்டை மனம் சகிக்கமாட்டாமல்

மன்றுடினுர் குருவை மன்னித்திட வேண்டி
பாவிக்குப் பரிந்தமையால் பாவமதைத் தான்
[சுமந்தார்
முருகன் கொடுத்தார் விபூதி, பிரசாதமெல்லாம்
தீர்த்தமுங் கொடுத்தாராம் தெளிந்ததுவாம்
[கண்பார்வை
தண்டனை தவருது, கால்நொண்டி யாகினுள்பின்
பாசமாம் பற்றுவைத்த பாவியவள் கணவனும்
[பின்
நோய் வாய்ப்பட்டு நொந்து கெட்டாரதிகம்
உயிரும் நீத்தார் பின்என்ன கதிஅடைந்தாரோ
எல்லாம் வல்லவொரு இறைவனே யறிந்திருப்
[பான்
மதிகேட்டினை யடைந்த மந்திரவாதி யொருவன்
கைலஞ்சம் வாங்கக் கனத்தவோராசை யுடன்
செய்வினை செய்தாராம் சேவற்கொடி யோனுக்கு
நவாலியை விட்டு நகருவாரென் றெண்ணி
மந்திரவாதியவன் மனைவியை முதல் பிரிந்தான்
மக்களும் கைவிட்டார் மங்கும் காலம்வரவே
நொந்தானும் மனமதிகம் நோயும் குடிகொண்ட
[தாம்
மானிப்பாயிலுள்ள மதிப்புள்ள சிகிச்சையிடம்
சென்று படுத்தானும் சிகிச்சை பெறுவதற்கு
அழுகி, ஒழுகி, ஆற்றுதற் காளில்லாமல்
தாகம் தணிப்பதற்கும் தக்கவோருதவி யின்றி
வருந்துவதைக் கண்டானும் வாடிக்கை
[யுள்ளொருவன்
உனக்கிந்த நிலைமை எவ்வாறு வந்ததென்று
வினவினனு மவனை விவேகமுடனேதான்

ஐயோ! நானறியாமல் ஐயன் கதிராமருக்கு
நவாலியம் பதியதனுல் நகர்த்திடவே வேணு
[மென்று
விதைத்த திவினையால் விளைந்தன யிவையெல்லாம்
என்ற மொழி கேட்டு இயல்புடனே யம்மனிதன்
வந்தடைந்தான் கோவிலுக்கு வழிவகையெல்லா
[மறிந்து
சொன்னுன் செய்தியினைச் சோகமுடனே தான்
இவ்விதமா யெத்தனையோ வருள் முன்னேற்ற
[முடன்
பேரின்ப மெய்திப் பெருமையுடன் வாழ்ந்திருந்
[தார்
புண்ணியங்கள் குன்றிப் பாவம் மேலிட்டதனுல்
ஒளியது மிகக்குன்றி யிருள்சூழ்ந்தது வதிகம்
அருளாளியின் அருமை அறிந்தோர் வெகுசிலரே
பேணி நடக்க வில்லைப் பெரியபொருளெனவே
மலிவாக வெண்ணினுர் மடமையினை யென்
[சொல்வேன்
சாமியார் சண்முகமும் சிவபதமடைந்த பின்னர்
அருளாளியின் தன்மை அணுவளவுந் தெரியாத
இருளர்கள் கிளையினெடும் இருட் கொள்கைக்
[கேற்றபடி
கேள்விகள் கேட்கவந்தார் கேட்டன ரல்லாத
[வற்றை
அபாய காலமதின் அறிகுறியாமவை களெல்லாம்
பெரியோர் சொல்வதெல்லாம் புறக்கணிப்பர்
[புல்லறிவோர்
தாங்கள் நினைத்தபடி யெல்லாம் நடத்திவந்தார்

குறைவின்றி வாழ்ந்து வந்த கோயிற் பிணைப்
[பிள்ளைகளில்
பருவமடைந் தோரிருவர் பண்ணினுர் கல்யாணம்
அறவாழ்வதன் நெறியை அறியாத அன்னவர்கள்
ஊரவர் வாழ்வது போல் உடுத்து வாழ்ந்திருந்
[தார்கள்
அடக்கத்தின் அவசியத்தை அறியாத
[அன்னவர்கள்
அடக்கங்களைக் குலைத்தார் அனுகரிகமென்
[றெண்ணி
இறை நாகரீகமதை எள்ளளவு மறியாதார்
பளிப்பார்கள், சிரிப்பார்கள், பொறுத்தார்கள்
[பெரியோரும்
மருந்து போன்றவையெல்லாம் விருந்தெனவே
[மாறியதாம்
முருகனைத் தரிசிப்பதென்றுல் முன்னுளில்
[முடியாதாம்
இவர்கட்குப் பின்னரெல்லாம் எளிதில்
[முடிந்திடுமாம்
மலிவாக்கினுர்கள் மகத்துவத்தை யுணராமல்
பிரச்சனைகளும் வளர்ந்து பிணக்குகளு முண்டாச்சு
குருமுருகனென்ன செய்வார் குறைக்கு வருத்த
[மூற்றூர்
இரங்கியுமழுவார் இவர்கள் மடமையினை யெண்ணி
உதாரண முமுண்டு உள்ளபடி விளக்கிடவே
இருஷிகள், முனிவர்கள், இருக்கும்வித மறிவீரோ
அருளாயாள் பவர்களெல்லாம் அடக்கம் மிகச்
[செய்வதுண்டு
பாவியர்களை யெல்லாம் பார்த்திடார் கண்
[கொண்டு

சிவமாகி யிருப்பார் சிவபூசையும் முடிப்பார்
இருளர்கள் முன்பாக இருக்கவொருப்பட
[மாட்டார்
இதுவுமோர் நலம்தான், ஆனல் இறைநலமாம்
இதையும் தியாகம் செய்தார் எங்கள் குருமுருகன்
செபத்தி லிருப்பதற்கும் சிறந்தவிட மில்லையாம்
அடக்கமென்ப தில்லையாம் அந்நாளிருந்தது போல்
அலங்காரத் திருவிழாக்கள் அழகுறவே செய்து
[வரும்
அயற் கோவில்களைப் போன்று அமைத்தன
[ராமவர்கள்
காவடிகள் செய்து கனக்கவே வைத்தாலும்
காவடித் தேவதைகள் கலிகொள்வது குறைவாம்
காவடி யாடுவது கர்நாடக மென்று
சிறுவர், சிறுமியெல்லாம் சிரிப்பாராம் வெட்க
[முடன்
ஒளிமிகக் குன்றியதால் ஒளித்தன தேவாதி
[யெல்லாம்
குருவும், சிஷ்யனும் குறிப்பை யறிந்திருந்தனராம்
தீர்க்க தர்சனங்கள் திறமுடனே கண்டிருந்தார்
சிவம் கண்டதையும் சிறப்புடனே சொல்லுகிறேன்
இறை நாகரீகமதில் இனிமையுடன் திளைத்துவந்த
சாமியார் சண்முகமும் சிவபத மடைந்தாராம்
குருமுருகனும் பின்னர் தோற்ற மறைவாகினராம்
இறை நாகரீகமது இறையளவு மில்லாத
வடவிகா டென்னும் வனத்தனிலே நிற்பதையும்
வேடர்கள் வருவரென்று வெருண்டோடின
[ரெல்லாம்
ஓதுங்க வோரிடமின்றி ஓர்மமுடன் நிற்பதையும்

வருவது வரட்டுமென்று வயிரமுடன் நின்றதையும்
கண்டானும் காட்சிதனில் கனவாச் சரியமதாய்
பின்னுமோர் காட்சியினைக் கண்டானு மவனும்
குருமுருக னவர்கள் சமாதியடைந்த பின்னர்
பொறுப்பினை யேற்றுவந்து பொற்றுமேடையில் நிற்க
மணம்முடித்த பெண்ணுள் மல்லிகா என்பவளும்
வேறுமொரு பெண்ணுமாய் வெறுப்புக் குரியவிதம்
சேஷ்டைகள் பலபுரிந்து சிறப்பதனைக் குலைத்
[திடவே
மனமதில் நொந்தபடி மயங்கியே நின்றதையும்
கண்டவிதம் குருவுடனே கலந்துரை யாடினனும்
குருவினைப் பற்றியும் கண்டிருந்தானும் கனவு
குறிக்கவில்லையாம் குருவை, யவர்சீர் முறை
[கூறையாம்
எவ்வாறே வென்று இயம்புகிறேன் கேட்டிடுவீர்
குருமுருகன் பள்ளிகொள்ளும் பாங்கான
[கட்டிலினை
மூடர் பலர்சேர்ந்து முரட்டுச் சுபாவமுடன்
கால்கள் தெறித்திடவே யுருட்டினராம் பள்ளமதில்
ஆட்களும் பிறரில்லையாம் அவனடியார்ப்
[பிள்ளைகளாம்
தண்டித் திடுவதற்கும் தக்கவித மில்லாமல்
சண்டதிசயித்துக் கவலை கொண்டு நின்றுளும்
கருத்ததனை யறிவீரோ கரவாமல் சொல்லிடவோ
குருமுருக னவர்கள் சமாதியடைந்த பின்னர்
அருட்பணி செய்வதற்கு அருகதை யுடையோனும்
மேடைக்கு வந்தவனை மேன்மையுறுத படி
அடியார், தொண்டரெல்லாம் அவதூறு
[பலசெய்து

முருகனது சீர்முறையை முற்றுகக் கெடுத்து
[விட்டார்
என்பதுவே பொருளாம் ஏற்பீரோ வுள்ளமதில்
குருவும் சொன்னராம் குணமுடன்தான்
[கண்டவற்றை
அருளாளி யொருவனே யறியாமல் மூடரெல்லாம்
கூட்டியே ஒதுக்கி ஒருமூலையில் விட்டிருக்க
ஓங்க முடியாதவனும் ஒடுங்கியே இருந்தானும்
கண்டபடி விபரித்தார் கவலையதிக முடன்
பின்பு நடப்பவற்றை முன்பே யறிந்ததனால்
கவலைப் பட்டாராம் அவன் கதியை மனதிலுன்னி
இவ்வித மாகக் குருவும் சிஷ்யனுமாய்
கலந்துரையாடி யறிந்தனர் தத்தம் கதியை
சாதனை மிகுதியால் சாலச்சிறப் படைந்த
குருமுருகன் றன்கோலம் குறைந்து வந்ததாம்
[பின்னர்
அறிவில்லா வடியார்களும் அதிகதுன்பம்
[கொடுத்தார்
மூலைக்கும் யோசனைகள் மிகவாய் கொடுத்தார்கள்
கவலையும் கொடுத்தார்கள் கண்பார்க்
[கொணதபடி
பொருளாவல் கொண்டோர் பேயாட்ட
[மாட்டிவைத்தா
பிரபஞ்ச வாசையுள்ளோர் புறக்கணித்து
[வைதார்கள்
என்செய்வார் குருமுருகன் ஏழை யெனவழுதார்
நல்லவருள் மேனிரத்தம் நஞ்சு கலந்துளதாம்
சிறப்புடைய அவர்கோலம் சீர்குலந்து வந்தது
[வாம்

முடியும் நரைத்ததுவாம் முன்பில்லாத படி
ஒளிச்சிறப்பு களெல்லா மொடுங்கினவா மதன்பின்
அருள்மேனி கொண்டு அருட்கூத் தாடியவர்
இருட் பணிகள் மலிந்து இடர்ப்பட்டாரதிகம்
பொறுப்பதிக முண்டாச்சு பொறுத்தார்
[களவையெல்லாம்
ஈசன் பணியென்று இன்பமுடன் செய்துவந்தார்
இவ்வாறிருக்க இயம்புகிறேன் கேட்டிடுவீர்
கோயிற்பிணைப் பிள்ளைகளுள் கல்யாணம்
[செய்தவர்கள்
இருவராமென்று ஏற்கனவே சொல்லி வைத்தோம்
அன்னாருடைய அத்தனை விபரமெல்லாம்
அருட்பாடல்களாக அளித்த துண்டா முலகறிய.

அருந்தவப் புதல்வன் பாலசுப்பிரமணியம் அவர்களின் கல்யாண வரலாறு

கோவில் பிணைப்பிள்ளைகளில் மூத்தவிருபர் பற்றி
முன்னர் குறிப்பிட்டோம் முறைமை யுடனேதான்
மூன்றுவ தோராணும் பெயர் பாலசுப்பிரமணி
[யாம்
பால்ய வயதில் பலகலைக் காவடிகள்
கனக்கவே யாடுவதைக் கண்டிருப்பி ரெல்லோரும்
குருமுருகன் முன்பாகக் குதூகலம் மிகவுடனே
ஆடிவரும் காவடிகள் அளவிலடங் காவே
பாலசுப்பிர மணிக்கும் பால்ய வயதினிலே
காவடி வயிரவர் கலைக் கொள்வாரந்நாளில்
பெண் பிள்ளைகளிருவர் பின்பற்றி வந்தார்கள்
கலைகொண்டு ஆடுவார் கனமணி நேரமதாய்

தங்கிநின்றும் கோவிலிலே தக்கதொண்டு செய்து
[வந்தார்
இரு சகோதரிமாரும் இணைபிரியா திருப்பார்
கோவிலடி யார்களெல்லாம் குணமுடனே
[யன்புவைத்தார்
தாய் தந்தையர்களும் தாழ்ந்து வணங்கிநிற்பர்
மூத்தபெண் பிள்ளைபெயர் உருக்குமணி
[யென்றழைப்பார்
இளையாளின் பெயரைப் பவளமணி
[யென்றழைப்பார்
இவ்விதமாய் நேயமுடன் இவர்நடந்து
[வரும்நாளில்
மூத்தாள் விரும்பிஞள் சுப்பிரமணியை வெகுவாய்
பூசாரி சுப்பிரமணியும் புரிந்து கொண்டானவளை
உறவும் வளர்ந்தது காண் உள்ளபடியேதான்
கூடி விளையாடிக் கொடுத்து மகிழ்வார்கள்
இவ்வித மவளிருக்க இளையாள் பவளமணி
குருமுருகனின் தொண்டு குறிப்பறிந்து செய்து
[வந்தாள்
குருமுருகன் மனமுவந்தார் குணமுள்ள
[பாலியென்று
பாங்குக ளமைந்தவளாம் பவளமென்ற பேர்
[பொருந்த
சொற்றிறம்பாமை யென்ற கற்பு முடையவளாம்
தன்னலம் மிகக்குறைவாம் தயாள மனமு
[முண்டாம்
அவளகத்திலுள்ள வழகாம் முகத்தினிற்
[தோற்றுவது
குருகுலத்தில் வாழ்ந்து வந்தால் குலவிளக்கா
[மவளும்

கோயிற் தொண்டுகள் கோணமல் செய்திடுவாள்
அடியார்கள் அறவாழ்வில் அகமகிழ்ந்
[திருப்பாளாம்
நல்லவழி நாடிஞல் நற்கதி யடைவாளாம்
இவ்விதமே யிவர்கள் இன்பமுடன் வாழ்ந்து
[வந்தார்
மூத்தாளும் பூப்பெய்திப் பிரிந்திருந்தாள் சிலநாள்
பூசாரியுடன் கூடி வாழ்ந்திடவே விரும்பி
பெற்ருேருடன் சொன்னுள் பேதையவ
[ளெண்ணமதை
பெற்ருேரும் வந்தார் முருகனிடம் முறையிட்டார்
இசைந்தார் குருமுருகன் இவர்கள் விருப்பப்படி
ஆசாரம் வேணுமென்று ஆண்டொன்று
[செல்லும்வரை
வெளித்தொண்டு செய்வாள் வீடுசெல்வாள் படுக்க
இவ்வித மோராண்டு ஓடிமுடிந்த பின்பு
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெழுபத்
[தைந்தினிலே
மார்கழி மாதம் மதிநிறைந்த நாளொன்றில்
மாலே மாற்றுவித்தார் குருமுருகன் முன்னின்று
சீரடியர்ப் பிள்ளேயாம் சுப்பிர மணியனுக்கு
நாலுபேரறிய நல்லமணம் செய்து வைக்க
நாளும் நியமித்தார் நல்ல படியேதான்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெழுபத்
[தாறினிலே
சித்திரைமாதம் சிறந்த இருபத் தெட்டில்
திங்கட்கிழமை யன்று திருமணம் செய்துவைத்தார்
மூன்ருவதா மாண்டு முன்செய் தவப்பயனுய்
மார்கழி மாதம் இருபத்தைந்தாம் நாளில்

புத்திர னொருவன் பிறந்தா னிவர்களுக்கும்
தவச் சிறப்புள்ள தவப்புதல் வனுமவனும்
ஞான மதிகமுள்ள நற்பண் புடையவனும்
கொண்டு வருவார்கள் குருமுருகன் முன்பாக
கொண்டாடுவார் கோயில் குதூகல முடனேதான்.

தொண்டர் பரஞ்சோதி அவர்களின் வரலாறு

குருமுருகனுடைய தீர்க்க தர்சனப் படிக்கு
கல்யாண மொன்றும் நடைபெறுமாம்
[கோவிலிலே
அந்தப் படிக்கே யன்புடையா னொருவனையும்
அழைத்து வந்தார் முருகன் அதிசயமுடனேதான்
அவனுடைய தொடர்பையும் ஏற்பட்ட
[விதமதையும்
உரைத்திடுவேன் கேட்டிடுவீர் உள்ள படியேதான்
நாகரத்தினமென்ற நல்ல சீமாட்டி பெற்ற
பரஞ்சோதியென்ற மகன் பக்தி மிகவுடையான்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டறுபத்
[தேழினிலே
நாகரத்தின மென்பாள் நல்வினைப் பயனுக
வந்திருந்தாள் கோவிலிலே வல்வினைநோய்
[காரணமாய்
அப்போது குருமுருகன் அவள்மேல் கருணை
[கொண்டு
அவள் வினையைக் காய்ந்தார் அகோர
[முடனேதான்
பாங்கையறியாத பெண்ணுள் பயந்தாள்
[மிகநடுங்கி

மனமதிகம் நொந்தாள் மயக்க முடனேதான்
செய்வதறியாமல் திகைத்துப் போய் நின்றுளாம்
அப்போது குருமுருகன் அகக்குறிப் பறிந்தவராய்
அவளே அழைத்து ஆறுதல் மிகக்கூறி
வெவ்வினையைக் காய்ந்த விதமதை யும்விளக்கி
சந்தோஷித் திருக்கச் சாற்றினர் செய்தியொன்று
குறுகுறுப்படைந்த வுள்ளம் குதூகலிக்கும் காலம்
[வரும்
எங்களுடனே யுறவு கொள்ளும் வாழ்வுவரும்
அஞ்சாதேயென்று ஆசிமிகக் கூறினர் காண்
அவ்வாறது போல ஆண்டெழுபத் தைந்தினிலே
அவள் மகன் பரஞ்சோதி அணுகினன்
[கோவிலுக்கு
மயில்வாகன மொன்று திருத்த விருந்தமையால்
புதியவாகன மொன்றை யுவந்தளித் தானவனும்
கதிர்காம முருகன்மேல் காதலுடையவன் காண்
குருமுருகனு மவனே யுவந்தார் மனமார
அறவாழ்வின் சிறப்பதனே அறிந்திருந் தானவனும்
விரும்பினன் தானு மின்பமுடன் வாழ்வதற்கு
வாழ்க்கைத் துணையும் வாய்க்கு மெனவறிந்தான்
கண்டான் கலைவில் அரியவோர் காட்சியொன்றை
விளக்கமது கேட்டு விளங்கிடவே வேணுமென்று
வந்தானும் கோவிலுக்கு வழிவகை யுடனேதான்
வினவினன் முருகனிடம் விளக்கமது என்னவென்று
அப்போது குருமுருகன் அகமகிழ்வுட னுரைத்தார்
கனவின் பொருள்கூறக் கைதேர்ந்த வனிவன்காண்
என்று சிவமவனே யறிமுகம் செய்துவைத்தார்
விளக்கமது கேட்டுநிற்க விளம்பிடுவான் சிவமும்
தேவுக்களாகித் திறமுடனே வாழ்ந்து வரும்

சுத்த மாயையுடைய சுத்தாத்துமா வொன்றை
வாழ்க்கைத் துணைவியாய் வடிவேலன் வழங்கிடு
[வான்
ஆனலுனக்கு அதன் அருமை தெரியாப்பருவம்
வெறுக்கவும் செய்வாய் விலக்கவும் பார்த்திடுவாய்
பின்னர் பொறுதியுடன் பக்கத்தில் வைத்திருப்பாய்
என்று பொருள்கூறி ஏகினன் சிவமும்
அந்தப் படிக்கே ஆண்டெழுபத் தைந்தினிலே
ஆவணி மாதம் ஆனதோர் செவ்வாய்க் கிழமை
திகதி முப்பத்தொன்றினிலே தொட்டுமணம்
[முடித்தான்
கன்னியவள் யாரென்று காத்திருப் பீரறிவதற்கு
முன்னம் குருமுருகன் அவதாரம் மாறுமுன்பு
புத்திரர்கள் நால்வர் பிறந்திருந்தாரென
[வறிந்தோம்
மூத்ததுவோர் பெண்ணுருவாம் பெயரும்
[தவமணியாம்
இரண்டாவதும் பெண்ணும் பெயர் செகசோதி
[யாம்
இவள்தானப் பெண்ணும் இவனுக் குரியவளாம்
அத்த நட்ஷேத்திரத்தின் அபரிமித மிடுக்கதனல்
குருகுலத்துதித்த பெண்ணைக் கொண்டனனும்
[பெண்ணுக
கந்தபுரத் தொண்டருடன் கலந்துமிக வுறவாடி
ஒன்றுக வாழ்ந்து வந்தார் ஒற்றுமையுடனேதான்
கோவிலுக்குத் தொண்டு குணமுடனே செய்து
[வந்தார்
இடவசதிகள் முடங்கியிருந்த ஆலய அமைப்பை
விசாலிக்க முயற்சி செய்தான் விசாரமுடனேதான்

திருவிழாக்கள் சோடிகள் திறமுடனே
[செய்வான்காண்
சப்பரம், தண்டிகை, செய்வான் சாலச்
[சிறப்புடனே
தேருமொன்று செய்தான் திறமையுடனே தான்
பதினொறு திருவிழாக்கள் பாங்குடனே செய்து
[வந்தான்
தெய்வீக முள்ளவிரு பிள்ளைகளும் பெற்றார்கள்
குருவி னரவணைப்பில் குழந்தைகளும் வளர்ந்தன
[வாம்
ஞானமுள்ள பிள்ளைகளாய் நல்லபடி வளர்ந்து
[வந்தார்
ஊழ்வினைப் பயனவனை ஒதுக்கியது சிலகாலம்
மனைவியையும் மக்களையும். மறைத்தது சிலகாலம்
குருவி னருமைதனைக் கோள்கள் மறைத்தனவாம்
கோபமுள்ள சுபாவம் கொண்டவன் காணவனும்
விட்டுப் பிரிந்து வெளிநாடு செல்லவெண்ணத்
தந்தையார் சின்னத்துரை தடையா யிருந்தாராம்
மரணப் படுக்கையில் மயங்கி யிருந்தாராம்
அன்னிறந்த பின்னர் இறுதிக் கிரியையெல்லாம்
செய்துமுடித்த பின்னர் சிங்கப்பூர் போய்ச்
[சேர்ந்தார்
இங்கு குருமுருகன் இருந்திட்டார் சமாதியிலே
சமாதி அடைவதற்குச் சற்றுநேரம் முன்பாக
மல்லிகா வென்றழைத்தார் செகசோதி என்ற
[பெண்ணை
என்செய்யப் போகிறாய்? என்றார் கவலையுடன்
அவள்முகம் நோக்கினார் ஆசி மிகவுடனே
அயர்ந்தார் அதன்பின்னர் அடைந்தார் சமாதி
[நிலை

பயணமது சென்றிருந்த பரஞ்சோதி என்பானும்
கனவினில் கண்டானும் கலங்கினன் உள்ளமதில்
குருமுருகன் கோவிலுக்குள் நிர்வாண
[நிலையடைந்து
இருப்பதையும், தானும் அக்கோவிலுக்குள் வந்து
[நிற்க
மாதுளை மரத்தினின்றும் மாதுளங் கனிவெடித்து
முத்துக்கள் சிறி முகத்தினிலடித் தமையும்
கண்டானும் காட்சிதனில் கலக்கம்மிக வுண்டாகி
மாறியதாம் நெஞ்சம் மாதவத்தோன் நன்றி
[யெல்லாம்
மனதினில் நினைத்தானும் உயிர்மாய்க்கவும்
[நினைத்தானும்
பின்னர் ஒருவாறு மனதைத் தெளியவைத்து
மக்களை நினைத்து மதியுடனுயிர் வாழ்ந்து
விட்டகுறைக் கடனைத் தொடர்வானு யினன்
[காண்.

முருகனருள் பெற்றுய்வெய்திய சில புண்ணியாத்மாக்களின் விபரம்

நாட்டின் பலபாகமதால் பக்தியுடன் வந்தோருள்
புண்ணியாத்மாக்கள் சிலரைப் புகலுவேன்
[கேட்டிடுவீர்
ஆனைக்கோட்டை வாசிகளில் அதிசிரத்தை
[கொண்டொருவர்
சின்னத்தம்பி என்றதொண்டர் சிறப்புடனே
[வாழ்ந்து வந்தார்
இல்லறத்தான் என்பதற்கு இலக்கண மானவிதம்

வாழவேண்டுமென்ற அவாமிகக் கொண்டிருந்தார்
தானும் தொண்டு செய்வார் மக்களையும் செயப்
[பணிப்பார்
வினை வேதனையெல்லாம் விவேகமுடன்
[தீர்க்கறிவார்
அருளாவ லுள்ளவராம் அன்பருக்கும்
[சொல்பவராம்
குருவின்கைப் பானமுடன் விடமெல்லாம்
[போக்கடித்த
விஷயமறிந்த வொரு விவேகியு மிவர்தானும்
புண்ணியஞ்சேர் பூமியாம் புத்தூர் வாசிகளாம்
புண்ணியனர் பொன்னடிகள் போற்றியே
[வாழ்ந்தவராம்
குருமுருகன் வாழ்க்கையிலும் கூடிக் குலாவின
[ராம்
கண்ணீரும் சிந்தினராம் கடைசி வேளையதில்
நடராசா என்பவராம் நல்லதொண்டு செய்தவராம்
மகாதேவன் என்பவரும் மகத்தான தொண்டு
[செய்தார்
பராசக்தி என்பவரும் பாங்குடனே தொண்டு
[செய்தார்
கணேசன் என்பவரும் காலத்தை வென்றிருந்தார்
வள்ளிப்பிள்ளை என்பார் வழியினை யறிந்திருந்தார்
குருவன்பு கொண்டு கூடிக் கலந்திருந்தார்
அருளாவ லுண்டு அதிக சிரத்தையுண்டு
குருவரு ளுண்டவர்க்குக் குறைவில்லை
[வாழ்க்கையிலே
அண்டையூரி லொன்றும் ஆனைக்கோட்டை
[வாசியொராள்

நடராசா என்னும் நாமம் படைத்தவராம்
விவேகியா மவரும் விவசாயம் செய்பவராம்
மானசீகமுடனே மதிப்பாக வாழ்ந்து வந்தார்
குருமுருகனுடனே குதூகல மாயிருப்பார்
திருவிழாக்கள் செய்வார் திறமை மிகவுடனே
மஹவியுண்டு மக்களுண்டு, மயில்களுண்டு
[கோவிலிலே
தொண்டர்களிலொருவராய்த் துலங்கிடு வாரவரும்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெண்பத்தி
[ரெண்டில்
பங்குனி மாதமதில் பலபேய்க் கிடமாயொருவர்
கஷ்ட முற்றுரதிகம் கண்ணீரு மோடிடவே
குடும்பத்தி லுள்ளவர்கள் கூடவே யழுதார்கள்
பார்த்தார் குருஅவரை பாடுபட்டார் வெகுவாய்
நேரம் தெரியாமல் நோகவிட்டார் மேனியையும்
குடல் தாக்கமடைந்ததாம் குணப்படவு மில்லையாம்
ஓய்வெடுத்துக் கொண்டார் ஒருமாத காலம்வரை
பாதம் பதிந்தறையில் பகல் முழுதும் மிருப்பார்
இரவில் வருவார் ஆறுமுகன் வாசலுக்கு
இவ்விதமாக அவர் இருந்துவரும் நாட்களிலே
வீங்கினவாம் கால்கள் மினுக்க மிகவுடனே
பின்னர் மேலேறியதாம் மேனி முகமெல்லாம்
சுயபூசை முடிப்பதற்கும் சுகமில்லையா மவர்க்கு
தீர்த்தம் பருகிடவும் தீராத முட்டாம் வயிற்றில்
பார்க்கவிட மனமில்லையாம் பார்க்க வந்தோரை
[யெல்லாம்
அனுமதி யில்லாமல் அங்கலாய்ப் புற்றுர்பலரும்
கலங்கியே நின்றுர்கள் காணவே வேணுமென்று
சமாதி யடைவதற்குச் சரிவரநாள் ரெண்டிருக்க

மாலைநேரமதில் மக்கள் முன்பு வந்திருந்தார்
கட்டிலின் மேலிருந்து கால்கள்கீழ் தொங்கவிட்டு
பின்புறம் கையூன்றி இருந்துமே காட்சிதந்தார்
அழுதுநின்ற வன்பருக்கு ஆறுதலும் கூறினராம்
அஞ்சவேண்டாம் நீவிர் அனைவருமே வாழ்ந்திடு
[வீர்

நான் சாகமாட்டேன் சத்தியமென வறிவீர்
என்று மிருப்பேன் இல்லாதொளிவ னல்லேன்
எப்போதும் போல்நீவிர் எல்லாமே பெற்றிடலாம்
என்றுறுதல் கூறி இரக்கமுடன் முகம்நோக்கி
சிவத்தையு மழைத்துச் சிறப்புடனே சொன்னார்
[கான்

இவர்கள் எல்லாருக்கும் என்சார்பில் விபூதிகொடு
என்று குருசொன்னராம் எல்லோரும் அறிவாராம்
வாடிக்கையாள ரெல்லாம் வாங்கினரா மப்போது
இவ்வித மாயவரும் ஏடுதொடக்கி வைத்தார்
அருட்பணிக் குரியவனை அறிமுகம் செய்து
[வைத்தார்

இதற்கு மேலுமதிகம் ஏதுமுண்டோ செய்வதற்கு
குறிப்பறிய மாட்டாதார் மரமன்றே மறைப்
[படிக்கு

சாந்தப் படுத்தியபின் சாந்தியெய்தி ஞரவரும்
அன்று முதல் அவரும் ஆறுமுகன் வாசலிலே
தங்கிவிட்டார் மக்கள் தமைப் பார்த்திட வென்று
வந்து குவிந்தார்கள் வள்ளலைப் பார்ப்பதற்கு
அழுதவர்கள் கண்ணீர் ஆருக வோடியதாம்
பார்க்க வந்தோரை யெல்லாம் பண்புடனுபசரித்
[தார்

விசாரமுடன் நின்றோரை விசாரித்தார் சுகதுக்கம்

தூரமதால் வந்தோரைத் துணுவி யுபசரித்தார்
மறுநாளவர் நிலைமை முற்றுக மாறியது
மனதை யொடுக்கவோர் உபாயமோ நானறியேன்
அப்பு, அப்புவென்றே, அரற்றினர் நாள்முழுதும்
இறுதி நேரம் வரை இவ்விதமே யுச்சரித்தார்
தோற்றமும் மாறித் துலங்கினர் முன்போல
வீக்கமெல்லாம் நீங்கி வீங்கினர் அழகுறவே
திரும்பவும் குருவைத் திறமுடன் பெற்றேமென
அன்பர் அடியார்களெல்லாம் அகமகிழ்ந்
[திருந்தனராம்
வைத்தியம் தெரிந்தசிலர் மருந்தருந்தக்
[கேட்டனராம்
வேண்டாமென அவரும் விவேகமுடன்
[மறுத்தாராம்
பருக்கும் தீர்த்தமதைப் பருகமன மில்லாமல்
தூக்கியிருத்தச் சொன்னர் தான் பருகவேணு
[மென்று
தூக்கியிருத்திய பின் தானே பருகினராம்
சிவத்தினை யழைத்தாராம் சாலச் சிறப்புடனே
எடுத்துவா என்றுராம் இரவுமணி இரண்டளவில்
என்னப்பனே என்று இதமுடனே கேட்டுநிற்க
காசை எடுக்கச் சொன்னர் காய்கறி வாங்குதற்கு
பூசாரியாருக்குப் பொருள் கொடுக்கும் பொறுப்பை
மனதி லெண்ணினர் மாதவ முடையோனும்
மூன்றுவது நாள் நிலைமை முற்றுக மாறியது
குழந்தை போலவரும் கூவியழைப்பார் சிவத்தை
தூக்கவும் சொன்னர் துன்பமென்றுன் சிவமும்
மற்றுரையும் கேட்டார் தமைக்காவும் படியாக

எல்லோரு மொத்தபடி இயலாதென வுரைத்தார்
குருமுருகன் தீர்க்க தெர்சனப் படியுரையில்
புல்லாங் குழலாதி பார்த்துநிற்பன் கடைசியிலே
என்பதுவாம் வசனம் அவ்விதமே யவரருகில்
புல்லாங் குழலுடனே புனிதமுடன் சிலையொன்று
பார்த்தபடி நின்றதாம் பலருமறிந் திடவே
அன்பர்கள் அடியவர்கள் ஆனதொண்டு
[செய்பவர்கள்
எல்லோருமாக ஏக மனதுடனே
எதிர்பார்த் திருந்தார்கள் எவ்விதம் நடக்கு
[மென்று
சோர்வுட னிருந்தார் சொற்பநேரம் வரை
பின்வீறுட னெழுந்தார் விழித்துமே பார்வை
[யிட்டார்
அடங்கினர் அமைதியுடன் அடைந்தார் சமாதி
[நிலை
மகா சமாதியுற்றார் மாதம் வைகாசியதில்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டெண்பத்து
[ரெண்டில்
திகதி இருபத்தாறில் சிறந்த திருவாதிரையில்
அன்னரின் அரிய சமாதிக் கிரியையெல்லாம்
இருபத்தேழாம் நாள் இனியகுரு வாரமன்று
நடைபெற்ற துண்டாம் நல்லவோர் முகூர்த்தமதில்
தூரவிடத் தன்பரெல்லாம் தூயவனைக் காண
[வந்தார்
அறிவித்தலேது மின்றி அதிசயிக்க வந்துநின்றார்
காரணம் தெரியாமல், காதலுடன் வந்தனராம்
கண்டார்களவ ருருவைக் கண்ணீரலை மோத
விம்மி யழுதார்கள், வீற்றிருந்த விதம்பார்த்து

தம்மையும் மறந்தார்கள், தாயுமானவரை யெண்ணி
குருவேயென் றழுவார்கள், கூசுவர் கோவிலே
[யெண்ணி
பார்ப்பதற்கு வந்தோரும், படம்பிடிக்க
[வந்தோரும்
வணங்கிட வந்தோரும், வாழ்த்திடவே வந்தோரும்
தொண்டுசெய்ய வந்தோரும், துயர்தீர்க்க
[வந்தோரும்
காண வருவோரும் 'கண்'கலங்கி நிற்போரும்
எண்ணிலடங் காவாம் (கோவில்) எல்லைகட்கு
[மப்பாலாம்
தூக்கிக் காவும்படி தூயகுரு சொன்னதுபோல்
காவினர்கள வருருவைக் கனபேர்கள்
[பார்த்திடவே
வீதிவலம்வந்து வெளிவீதி கொண்டு சென்று
அலங்கார மாக அழகனு ருருவமதைச்
சமாதி யிருத்தினராம் சாலச் சிறப்புடனே
மூலனுருரைக் கிணங்க முன்னேர் முறைப்படியே
குருகுறித்த விடமதனில் குறைகள் வாராதவிதம்
கோவிலு முண்டாச்சு கோபுர மதனுடனே
அளவில் சிறிதாங் கோயில் அளப்பரிதாந்
[தலமகிமை
அற்புத மனேகமாம் அளவிலடங் காவாம்
இன்றுந் திகழ்வதுவாம் இன்பப் பெருக்குடனே
குருமுருகனுர் கதையைக் குறைவின்றி
[வாசித்தோர்
கருத்தினில் வைத்தோர் காதலுடன்
[கேட்டறிந்தோர்

புண்ணியனுர் கதையைப் புனிதமுடன்
[கேட்டறிந்தோர்
பக்தியுடனவர் கதையைப் பாடி மகிழ்ந்திடுவோர்
நாட்ட மதிகமுடன் நல்விரதந் தானிருந்தோர்
பலசெல்வமும் படைத்துப் பல்லாண்டு
[வாழ்ந்திருப்பார்
ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி
மூங்கில் போல் சுற்றம், முசியாமல்
[வாழ்ந்திருப்பார்;

குருமுருகனுர் புண்ணிய கதை முற்றிற்று.

SRI LANKA PRINTING WORKS, JAFFNA
PHONE: 24175